உ

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாளையம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகாதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

பழமலையந்தாதி.

இஃது,

ஷை ஆதினத்துச் சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

திருத்தமாசப் புதுக்கப்பட்ட உரையோடு,

தண்டையார்பேடு

க. வ. திருவேங்கடநாயுடுவால்

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

விய ௵ ஆனி ௴.

உ

கணபதிதுணை.

பழமலையந்தாதியுரை.

காப்பு.

சீரதங்கோட்டுமுனிகேட்டநூற்படிசெங்கரும்பா
லேரதங்கோட்டிவயல்சூழ்முதுகுன்றிறையவனைப்
பூரதங்கோட்டுமலையானைப்பாடப்புரந்தருளும்
பாரதங்கோட்டுநுதியாலெழுதியபண்ணவனே.

(இதன்பொருள்.) பாரதம் கோட்டு நுதியால் எழுதிய பண்ணவன் - (ஐந்தாம்வேதமென்னும்) பாரதகதையைத் (தனது) கொம்பு நுனியாகிய எழுத்தாணிக்கூரினால் (மேருமலையென்னும் ஏட்டில் சிலாசாதனமாக) எழுதிவைத்த விநாயகக்கடவுள்,— செங்கரும்பால் ஏர் ஓட்டு வயல் சூழ் முதுகுன்று இறையவனை- (பள்ளர்கள்) சிவந்த கரும்பாகிய தாற்றுக்கோலினால் உழும்பகட்டை (அடித்து) நடத்துகின்ற கழனிகள் புடைவளைந்த பழமலையென்னும் தலத்தில்வாழும் தலைவரும்—பூ ரதம் கோட்டும் மலையானை-பூமியாகிய இரதத்தையும்வில்லாகவளைத்த மேருமலையையும் உடையவருமாகிய சிவபெருமானை— சீர் அதங்கோட்டுமுனி கேட்ட நூற்படி பாட-(உலகத்திலே) சீர்த்தி பெற்ற அதங்கோட்டு மகாமுனிவரால் கேட்கப்பட்டு விளங்கும் தொல்காப்பிய இலக்கணப்படியே (யான் தமிழினாலே) துதித்தற்கு,— புரந்தருளும்-இடையூறு வாராமற் காத்தருளுவர். என்றவாறு. அது பகுதிப்பொருள் விகுதி. அங்கு அசை.

திருவருந்தங்கவருங்கல்விமாதுசிறப்புவருங்
கருவருந்தங்கநிலையாதென்றுள்ளங்கரைந்திறைஞ்சிற்
பொருவருந்தங்கமலைபோலுங்குன்றைப்புராதனனை
யிருவருந்தங்கடலையாலிறைஞ்சுமிறைவனையே.

(இ-ள்.) பொருவரும் தங்கமலை போலும் குன்றை புராதனனை- ஒப்பில்லாத மேருமலையைப்போலும் (உயர்ச்சிபெற்ற) பழமலைநாதரும்—இருவரும் தங்கள் தலையால் இறைஞ்சும் இறைவனை - பிரம விட்டுணுக்களாகிய இருவரும் தங்களுடைய சிரங்களால் வணங்கும் முதல்வருமாகிய சிவபெருமானை,—கரு வருந்து அங்கம் நிலையாது என்று உள்ளம் கரைந்து இறைஞ்சில் - கருப்பாசயத்திலே துன்பத்தையடைந்துபிறக்கும் இச்சரீரம் நிலையல்லவென்றறிந்து, மனமுருகி வணங்கினால்,—திரு தங்க வரும் - சீதேவி தங்கும்படி வந்து சேர்வள்;—கல்வி மாது தங்க வரும் - கலைமகளும் தங்கும்படி வந்து சேர்வள்;—சிறப்பு தங்க வரும் - முத்தியும் நிலைபெற வந்து சித்திக்கும். எ-று. தங்க என்பது இடைநிலைதீபகமாக ஏனையிடங்களினும் கூட்டப்பட்டது. பழமலைநாதரை வணங்கில், இம்மையிலே கல்வி செல்வங்களேயன்றி தேகாந்தியத்திலே முத்தியுஞ் சித்திக்குமென்பது கருத்து. (க)

இறைக்குவளையுமிளங்கிள்ளையுமழகென்பவர்சேர்
துறைக்குவளையுமெகினமும்வாவிக்குத்தூயவிதழ்
நறைக்குவளையுமழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையுமுடல்வந்தவாறென்கொல்பேசுகவே.

(இ-ள்.) இறைக்கு வளையும் இளம் கிள்ளையும் அழகு என்பவர் சேர் - கைகளுக்கு வளையலும் இளமையாகிய கிளிப்பிள்ளையும் அழ

காகும் என்று சொல்லப்பட்ட மகளிர்கள் சேர்ந்து விளையாடா நின்ற—துறைக்கு வளையும் எகினமும் - மணிமுத்தநதித் துறைகளுக்குச் சங்குகளும் அன்னங்களும்—வாவிக்கு தூய இதழ் நறை குவளையும் அழகு ஆம் - தடாகங்களுக்குத் தூய்மையாகிய மடலையுடைய தேன்பொருந்திய செங்கழுநீரும் அழகாக அமைந்திருக்கின்ற—முதுகிரிநாதர்க்கு வளையும் உடல் இன்றி - பழமலைநாதராகிய இவ் விருத்தருக்குக் கூனியவுடலம் இல்லாமல்,—பிறைக்கு வந்த ஆறு என் பேசுக-(இந்த) இளம்பிறைக்கு (கூனியவுடலம்)வந்தகாரணம் யாது? சொல்வீராக. எ-று. [இது பழமலைநாதர் பவனிவரக்கண்டு மால்கொண்டுநின்ற மகளிர் ஒருவரையொருவர் வினவியது.] இறை கைவிரலின் கீற்று. அது கையை யுணர்த்தலின் ஆகுபெயர். என்ப் வர் என்பதில் செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்கது. கொல் அசைநிலை. (௨)

பேசுகவீரவருநாளென்றுல்லைப்பெருங்கடல்சே
ராசுகவீரபழமலைவாணவென்றன்பளைந்து
பூசுகவீரமதிவேணிநீற்றைப்புலவிர்பிறர்
காசுகவீரவளையுகவீர்மெய்க்கதிதருமே.

(இ-ள்.) புலவிர் - புலவர்களே,—ஈர வருநாள் என்று - (இயமன் வாளினால்) அரிய வருங்காலம் (இதுவே) என்று கருதி,—பெருங்கடல் சேர் ஆசுக - பெரிய பாற்கடலினிடத்தே தங்கிய பாணத்தையுடையவரே,—வீர - வீரரே,—பழமலை வாண - முதுகுன்றத்தில்வாழ்பவரே,—என்று ஓல்லை பேசுக - என்று விரையத் துதிப்பீராக.—ஈர மதி வேணி நீற்றை அன்பு அளைந்து பூசுக - குளிர்ச்சியையுடைய சந்திரனைத்தரித்த சடைமுடியையுடையவரது விபூதியை அன்போடு கலந்து தரிப்பீராக.—பிறர் காசு உகவீர் அவனை உக

வீர்மெய் கதி தரும் - பிறர்பொருளை விரும்பாது அக்கடவுளை விரும்புவீராகில் (அக்கடவுள் உங்களுக்கு) உண்மையாகிய மோட்சத்தைத் தந்தருளுவர். எ-று. இயமன் வருங்காலம் இதுவெனத்துணியப்படாமையின் ஈரவருநாளென்று ஒல்லைப்பேசுக என்றார். உகவீர் என்னும் வினைமுற்றுக்களுள் முன்னையது எச்சப்பொருள்பயந்து எதிர்மறையினும் பின்னையது உடன்பாட்டினும்வந்தன. (டு)

கதியிலைவேலைமடவார்க்கியற்றக்கருதுளமே
பொதியிலைவேலையுண்டுற்றோன்றொழும்பழம்பூதரத்தை
நுதியிலைவேலைமகிழ்வீரன்றந்தையைநோக்கிலைநீ
யொதியிலைவேலைவளர்ப்பாய்தருவையொடித்தெறிந்தே.

(இ-ள்.) நுதியில் ஐ வேலை மகிழ் வீரன் தந்தையை - நுனியிலே நுண்மைவாய்ந்த வேலாயுதத்தை விரும்பிக் கரத்திலேதரித்த வீரத்தையுடைய முருகக்கடவுளது பிதாவும்—வேலை உண்டு பொதியிலை உற்றோன் தொழும் பழம்பூதரத்தை நோக்கிலை - சமுத்திரநீரை உழுந்தளவாக்கியுறிஞ்சிப் பொதியமலையை யடைந்து வீற்றிருக்கின்ற அகத்தியமகாமுனிவர் வணங்கும் பழமலைநாதருமாகிய சிவபெருமானைத் தரிசித்தலையுஞ்செய்யாது—மடவார்க்கு வேலை இயற்ற கருது உளமே - மாதர்களுக்கு ஏவற்பணிகளை (இடைவிடாது) புரியச் சிந்தித்தொழுகும் என்மனமே,— நீ தருவை ஒடித்து எறிந்து ஒதி இலை வேலை வளர்ப்பாய் - நீ (பயன்படும்) கற்பகத்தருவை முறித்தெறிந்துவிட்டு (பயன்படாத) ஒதியமரத்தையும் இலைகளையுடைய வேலமரத்தையும் வைத்து வளர்ப்பாய் போலும்:—கதியிலை - (நீ இங்ஙனம் உழலுதலால் நினக்கு யாதொரு) கதியும் இல்லை. எ-று. நோக்கிலை முற்றெச்சம். உதி ஒதியென

மருவிற்று. வேனிற்காலத்திலே ஒருவரும் வெய்யிற்கொதுங்காவண்ணம் ஓதி இலைகளையுதிர்த்து வெறுமையாய் நிற்றலானும், வேல் இலைகளையுடைத்தாயிருப்பினும் கீழே இடமின்றி முட்களையுதிர்த்து நிற்றலானும், பயனின்மை நோக்கி, ஓதியிலைவேலை வளர்ப்பாயென்றார்.()

ஒடியமருங்குலைக்கொங்கைகள்வாட்டுறுமோடரிக்கட்
டொடியமருங்குலைக்காந்தளங்கைம்மகள்சோரமதன்
கடியமருங்குலைத்தீப்போன்மதியங்கனன்றெழுத
லடியமருங்குலைச்செய்ம்முதுகுன்றர்க்கறைகுவமே.

(இ-ள்.) ஒடிய, மருங்குலை வாட்டுறும் கொங்கைகள் ஓடு அரிக்கண் - ஒடியும்படி இடையை வருத்துகின்ற (பருத்த) தனங்களையும் பரவிய செவ்வரிகளையுடைய கண்களையும்,— தொடி அமரும் குலை காந்தள் அம் கை மகள் சோர - வளையல்பொருந்திய கொத்தாகிய காந்தள்மலர்போலும் அழகிய கைகளையுமுடைய என்மகள் சோர்வடையும்படி;—மதன் கடிய மருங்கு உலை தீப்போல் மதியம் கனன்று எழுதல் - மன்மதன் (பாணங்களையேவி ஓர்பக்கத்திலேநின்று) வருத்த மற்றொருபக்கத்தில் கொல்லுலைத்தீப்போல் சந்திரன் சுவாலையைவீசிக்கொண்டு எழுதலை,—அடியம் அரும் குலை செய் முதுகுன்றர்க்கு அறைகுவம் - அடியேங்கள் அரிய கரைகளையுடைய் வயல்சூழ்ந்த பழமலைநாதருக்குச் சொல்லுவேம், எ-று. [நற்றாய்பாங்கியரோடிரங்கல்.] (௫)

மேருக்குவடுநிகர்தோட்பழமலைமேவுதிருத்
தேருக்குவடுவேசமாடுமோடத்தெருவினிற்போய்
நீருக்குவடுவிழியெழின்மாய்ந்தெதிர்நின்றுநம
ஆருக்குவடுவிளைத்தனளேயின்றொழிவறவே.

(இ-ள்.) மேருக்குவடு நிகர் தோள் பழமலை மேவு திரு தேருக்கு - மேருமலையை ஒத்த புயங்களையுடைய பழமலைநாதர் எழுந்தருளிவராநின்ற அழகிய இரதத்தைத் தரிசித்தற்கு,—உவள் துவசம் ஆடும் மாடம் தெருவினில் போய்-இந்தப்பெண் சிறுகொடிகள் அசையாநின்ற மாளிகைசெறிந்த வீதியின்வழியே சென்று,—வடு விழி நீர் உக்கு எழில் மாய்ந்து எதிர் நின்று - மாவடுவின் பிளப்பையொத்த கண்களினின்றும் நீரைச்சொரிந்து அழகழிந்து (விரகத்தோடு அத்தேரின்)முன்னேநின்று,— நமது ஊருக்கு ஒழிவற இன்று வடு விளைத்தனள் - (வசையற்ற) நம்முடைய நகரத்திலுள்ள மடந்தையர்க்கு (எக்காலத்திலும்) நீங்காவண்ணம் இற்றைப்பொழுது வசையை உண்டாக்கினள். எ-று. [தேர்வரவுகண்டமகளிர் திகைப்புணர்த்தியது] ஊர் அதிலுள்ளாரையுணர்த்தலின் ஆகுபெயர். (சூ)

ஒழியாக்கவலையொழிவதென்றோசொல்லுழல்புலத்தின்
வழியாக்கவலையிடைப்படுமானின்மயங்கிநின்று
பழியாக்கவலைமனமேபணிந்துபரவிலைவேல்
விழியாக்கவலைமகளிறைதாழ்பழவெற்பினையே.

(இ-ள்.) மனமே - நெஞ்சே,—வேல் விழி ஆக்கம் அலைமகள் இறை தாழ் பழவெற்பினை பணிந்து பரவிலை-வேல்போலும் கண்களையும் செல்வத்தையுமுடைய இலக்குமிக்கு நாயகராகிய விஷ்ணுமூர்த்திவணங்கும் பழமலைநாதனை வணங்கித் துதித்தாயில்லை;— வலையிடை படும் மானின் மயங்கி நின்று - வலையினிடத்தே அகப்பட்ட மான்போல மயக்கமுற்றுநின்று,—உழல் புலத்தின் வழி யாக்க பழி ஆக்க வல்லை - சுழன்றுதிரியும் ஐம்புலவழியிலே என்னைக் கட்டவும் எனக்குப் பழியை உண்டாக்கவுமே வல்லாய்:—ஒழியாக் கவலை ஒழி

வது என்றோ சொல் - (நீ இங்ஙனமிருக்கில் யாம் எக்காலத்தும்) நீங்காத விதனத்தை நீங்குவது எந்நாளோ சொல்வாயாக. எ-று. (எ)

வெற்றிக்குமாரனையீன்றபழமலைவேந்தனின்னு
முற்றிக்குமாரனைநோக்குங்கொலோவென்பர்மூலைவம்புச்
சொற்றிக்குமாரநைவார்மடவாரவன்றோண்முலையோ
டொற்றிக்குமாரணையோன்முனஞ்சேரவுழலுவரே.

(இ-ள்.) மடவார் - பெண்கள்,—வெற்றி குமாரனை ஈன்ற பழமலை வேந்தன் இன்னும் முற்று இக்கு மாரனை நோக்குமோ என்பர் - சயம்பொருந்திய முருகக்கடவுளைப் புதல்வனாகப் பெற்ற பழமலைநாதர் இன்னும் ஒருமுறை முதிர்ந்த கருப்புவில்லையுடைய மன்மதனை எரியும்படி பார்த்தருளுவரோ! என்று சொல்லுவர்;—மூலை வம்புச் சொல் திக்கும் ஆர நைவார் - அந்தரங்கத்திலே இரகசியமாகப்பேசிய புதிய களவொழுக்கவார்த்தைகள் எட்டுத்திக்கிலும் பரவலால் (அவைகேட்டு) வாடுவர்;—அவன் தோள் முலையோடு ஒற்றிக்கு மார் அணையோன் முனம் சேர உழலுவர் - அப்பழமலைநாதருடைய புயங்களைத் தமது முலைகளுடன் அணைத்துக்கொள்ளும்படி அவர்முன்னே செல்லுதற்கு உழன்று திரிவர். எ-று. [இது வீதிமடவார் விரகங்கூறியது.] கொல் அசை. ஆர என்பது வினையெச்சத்திரிபு. மார் ஈறு "மார்வினையொடு முடிமே" என்னும் விதிப்படி உழல்வார் என்பதனோடு முடிந்தது. இர வினை முற்றுக்கள்போல ஓரோவிடங்களில் எச்சப்பொருள் பயப்பினும் முற்றெனக்கொள்ளுதலே ஆன்றோர்வழக்கு. (அ)

உழவனைச்சந்தவிளவாளைபாய்வயலோங்குகுன்றைக்
கிழவனைச்சர்ததமுகினைவாய்நற்கிளைவளரும்

பழவரைச்சந்தநறுந்தழைவாங்கிப்பரவினடு
ளெழவரைச்சந்தமயிலியல்பூசவுமெண்ணினளே.

(இ-ள்.) அந்த மயில் இயல்-அந்த மயில்போலுஞ் சாயலையுடையவள்,—நல் கிளை வளரும் பழவரை நறும் சந்தம் தழை வாங்கி பரவினள்-நல்ல மூங்கில்கள் வளராநின்ற பழமலையினின்றும் நீ கொய்துவந்த வாசனைபொருந்திய சந்தனத்தழையை (உன்கையினின்றும் தன்கையிலே) ஏற்று வணங்கித் துதித்தாள்;—தூள் எழ அரைச்சு பூசவும் எண்ணினள்-அதனைத் துகளெழும்படி அரைத்து மேனியிலே பூசிக்கொள்ளவும் நினைத்தாள்; (ஆகையால்),—உழவரை சந்தம் இள வாளை பாய் வயல் ஓங்கு குன்றை கிழவரை சந்ததமும் நினைவாய் - பள்ளர்களை அழகிய இளமையாகிய வாளைகள் பாய்ந்து திரியப்பட்ட கழனிகள் சூழ்ந்த பழமலைநாதரை எப்போதும் நினைப்பாயாக. எ-று. நினைக்கில் நின்கருத்து எளிதில் முடியும் என்பது எஞ்சிநின்றது. [தலைவி கையுறையேற்றமை பாங்கி தலைவற்குரைத்தல்.]

எண்ணிவருந்தினநொந்தோம்பழமலையெய்திலர்கா
ணண்ணிவருந்தினமின்றேயினிக்கதிர்நற்புரவி
மண்ணிவருந்தினமாவாலெழுந்துகள்வந்துடலின்
கண்ணிவருந்தினவான்மதிறேய்க்குங்கடிநகரே.

(இ-ள்.) பழமலை எய்து இலர் எண்ணி வருந்தினம் - (பெண்ணே,) பழமலையினிடத்தே பொருந்திய வீட்டையுடையவராகிய நம்மிறைவர் (என்று வருவரோ! என மனதிலே,) நினைத்து வருத்தப்பட்டோம்;—நொந்தோம் - விரகநோய்கொண்டு மெலிந்தோம்;—மண் இவர் உந்தின மாவால் எழும் துகள் வந்து உடலின்கண் இவரும் தினவால் - (இப்பொழுது) பூமியின்கண்ணே அத்தலைவரால் செ

வுத்தப்பட்ட குதிரைக்குளம்பால் எழுகின்ற தூளிகள் (ஆகாயத்தில்) வந்து சரீரத்தினிடத்திலே படிதலாலுண்டாகிய தினவினால்,—கதிர் நல் புரவி கடி நகர் மதில் தேய்க்கும்-சூரியனுடைய நல்ல குதிரையானது காவலையுடைய நமது நகரத்தினது (வானளாவிய) மதிற்புறத்திலே உரோஞ்சிக்கொள்கின்றது; (ஆகையால்),—கான் நண்ணி வரும் தினம் இன்றே இனி - காட்டுவழியே பொருந்திவருகின்ற தினம் இத்தினமே: இனிக் கவலற்க. எ - று. [பாங்கி தலைமகன் வரவு தலைவிக்குணர்த்தல்.] கவலற்க என்பது சொல்லெச்சம். (கo)

கடிக்கஞ்சமனையுவந்துலகாக்குறுங்காரணனோர்
முடிக்கஞ்சமனைதொறும்பலியேற்றமுதுகிரியான்
மிடிக்கஞ்சமனைவருந்தொழவாழ்வம்விரவுறுமெங்
குடிக்கஞ்சமனைவெருவுதலையின்றுகொல்வனென்றே.

(இ-ள்.) கடி கஞ்சம் மன் ஐ உலகு உவந்து ஆக்குறும் காரணன் - வாசனைபொருந்திய தாமரைப்பூவில் நிலைபெற்ற கடவுளாகியும் உலகங்களை மகிழ்ந்துபடைக்கும் தலைவனுகியுமிருக்கின்ற பிரமதேவனுடைய—ஓர் முடி கஞ்சம் மனைதொறும் பலி ஏற்ற முதுகிரியான் - ஓர்தலையாகிய வெண்கலப்பாத்திரத்திலே (தாருகாவனத்து முனிபத்தினிகளுடைய) வீடுகடோறுஞ்சென்று பிச்சையேற்ற பழமலைநாதரானவர் — விரவுறும் எம் குடிக்கு கொல்வன் என்று அம் சமனை வெருவுதலே இன்று - கலந்து அடிமைகொண்ட எமது குலத்துள்ளார்க்கும், கொல்லவருவானென்று அழகிய இயமனுக்கு (எப்போதும்) அஞ்சுதலே இல்லை;—மிடிக்கு அஞ்சம்- தரித்திரத்துக்கும் பயப்படோம்;—அனைவரும் தொழ வாழ்வம் - எவ்வுலகத்தவரும் வணங்கவும் வாழ்வோம். எ-று. கஞ்சம் பாத்திரத்தை யுணர்

த்தலின் ஆகுபெயர். மிடிக்கும் தொழவும் குடிக்கும் என்னும் உம்மைகள் விகாரத்தாற்றொக்கன. குடி அதிலுள்ளாரையுணர்த்தலின் ஆகுபெயர். சமனை வேற்றுமைமயக்கம். (௧௧)

கொல்லைக்குறவனைவாயனையார்கரிக்கோட்டைவிளை
நெல்லைக்குறவனையாதுகொள்காளத்திநேயனைவான்
றில்லைக்குறவனைநம்முதுகுன்றனைச்சேர்வலென்றூ
ரெல்லைக்குறவனைமாத்திரைக்கேநலமீகுவரே.

(இ-ள்.) குறவனை வாய் அனையார் - வேடர்களைத் (தமது கணவராக) வாய்ந்த அவ்வேடமங்கையர், — கரி கோட்டை கொல்லை விளை நெல்லை குற-யானைக்கொம்புகளைப் புனங்களிலேவிளையாநின்ற மலைநெல்முதலிய தானியங்களைக் குற்றுதற்கு — வனையாது கொள் காளத்தி நேயனை - நீக்கமின்றிக் கைக்கொண்டு செல்லும் காளத்திமலையினிடத்தே விருப்பமுடையவரும்—வான் தில்லைக்கு உறவனை - மேலாகிய சிதம்பரதலத்தில் உறவாயிருப்பவருமாகிய— நம் முதுகுன்றனை சேர்வல் என்று ஊர் எல்லைக்கு உற - நமது பழமலைநாதனைச் சென்று தரிசிப்பேனென்று அத்தலத்தினெல்லையிலே(ஒருவன்) உற்றால்,—அனை மாத்திரைக்கே நலம் ஈகுவர்-அவனுக்கு அனைநொடியளவிற்குள்ளே நன்மையைக் கொடுத்தருளுவர். எ-று. குற இடைக்குறை. தில்லைக்கு எல்லைக்கு மாத்திரைக்கு என்பன வேற்றுமை மயக்கம். உற வினையெச்சத்திரிபு. (௧௨)

ஈகையிலங்கைதவமுளமெங்ஙனமெய்துவமென்
றேகையிலங்கைவடிவேலொடுவருந்தோன்றறந்தை
வாகையிலங்கையரசிறவூன்றியவள்ளன்மழு
மாகையிலங்கைம்முகமுதுகுன்றன்மலர்ப்பதமே.

(இ-ள்.) ஈகை இலம் கைதவம் உளம் - (ஒருவருக்கும் ஒரு பொருளைக்) கொடுத்தறியேம் வஞ்சனையையுடையேம் (இப்படிப்பட்டயாம்),—மென் தோகையில் அங்கை வடிவேலொடு வரும் தோன்றல் தந்தை - மிருதுவான தூவியையுடைய மயிலிலேறிக் குடங்கையேந்திய வடித்த வேலாயுதத்தோடு எழுந்தருளிவரும் முருகக்கடவுளுடைய பிதாவும்—வாகை இலங்கை அரசு இற ஊன்றிய வள்ளல் - (திக்குவிசயம்பண்ணி) வெற்றிமாலையை யணிந்த இராவணன் (கைலைமலையை யெடுத்தகாலத்து முதுகுதண்டு) இற்றுவிழ (காலினது பெருவிரலால்) இருத்திய தியாகியும்—மழு மா இலங்கு கை ஐம்முகம் முதுகுன்றன் - பரசும் மானும் பிரகாசிக்கும் கரங்களையும் ஐந்துவதனத்தையுமுடைய பழமலைநாதருமாகிய சிவபெருமானுடைய—மலர்ப்பதம் எங்ஙனம் எய்துவம் - தாமரை மலர்போலுந் திருவடிகளை எப்படியடையக்கடவேம். எ-று. பின்னர் சாமகீதத்திற்கிரங்கி அவ்விராவணனுக்கு வேண்டியவரங்களைத் தருதலின் வள்ளலென்றார். மா. என்பது னகரச்சாரியை பெறுதுநின்றது. (கஉ)

பதம்பரவைக்குவருந்துபிராற்குப்பசுமயின்மேற்
கதம்பரவைக்குவரச்சுற்றுகட்செவிக்கங்கணற்குச்
சிதம்பரவைக்குமுதுகுன்றவாணற்குச்செல்வமெல்லா
மதம்பரவைக்குகிர்கரித்தோறலைமாலைகளே.

(இ-ள்.) பரவைக்கு பதம் வருந்து பிராற்கு - பரவைநாச்சியார் பொருட்டுத் (தூதுநடந்து) திருவடிகள் வருந்திய கர்த்தரும்—கதம்பர் பசும்மயின்மேல் அவைக்கு வர சுற்று கட்செவி கங்கணற்கு - கடப்பமாலையையணிந்த முருகக்கடவுள் பசிய மயிலின்மேலேறிக்கொண்டு தமது சபைக்குவர (அம்மயிலைக்கண்டு நடுங்கிக் கைகளிலே) சுற்றிக்கொள்ளும் சர்ப்பகங்கணத்தை யுடையவரும்—சிதம்பர

ஐக்கு-சிதம்பரத்தில் வீற்றிருக்கும் தலைவருமாகிய—முதுகுன்ற வாணற்கு செல்வம் எல்லாம் - பழமலை நாதருக்குரிய ஐசுவரியங்களையெல்லாம் (உற்றுப் பார்க்கில்),—மதம் பரவைக்கு நிகர் கரித்தோல் தலை மாலைகளே - மதசலமானது கடனீர்ப்பெருக்கத்துக்கு நிகராகிய யானையினது தோலும் சிரமாலிகைகளுமேயன்றி வேறில்லை. எ-று. மகளே இச்செல்வமுடையானைக்கண்டோ இச்சித்தாய் என்பது எஞ்சிநின்றது. [நற்றுயிரங்கல்.] (கச)

மாலைக்கலுழனெய்யோனெனத்தாங்கவயங்குமரு
ணூலைக்கலுழவொழியெனுமேற்றிவர்நோன்மையனூழ்
பாலைக்கலுழவொருமகற்கீந்தபழமலையான்
மூலைக்கலுழநடம்புரிவானெம்முதற்றெய்வமே.

(இ-ள்.) மாலை நொய்யோனென கலுழன் தாங்க-மாயவனைக் கனமில்லாதவனென்று உலகத்தார்சொல்லும்படி கருடன் சுமக்க—அருள் வயங்கும் நூலை கல் உழவு ஒழி எனும் ஏற்று இவர் நோன்மையன்-சிவபெருமான்றிருவருள் விளங்குதற்கு ஏதுவாகிய சிவாகமத்தைக் கற்றுக்கொள் பிறவித்துன்பங்களை நீக்கிக்கொள் என்று (தன் சீடருக்குபதேசிக்கும்) இடபவாகனத்திலேறும் கனம் பொருந்தினவரும்—கலுழ ஒருமகற்கு ஆழ் பாலை ஈந்த பழமலையான்-(குழவியாய்) அழுதல்கண்டு உபமன்னியமகாமுனிவருக்கு ஆழம்பொருந்திய பாற்கடலை அழைத்துக்கொடுத்த பழமலைநாதருமாகிய—எம் முதற்றெய்வம்-எமது முதற்கடவுளானவர்,—மூலைக்கு அல் உழ நடம் புரிவான்-(ஆன்மாக்களுடைய) அகத்திலே (குடிகொண் டிருக்கும்)மலவிருளை (அருளொளியால்) பிளக்கவேநடனம்புரிகின்றார். எ-று. பால் ஆகுபெயர். மூலை உள்ளிடத்தை யுணர்த்திற்று. மூலைக்கு வேற்றுமை மயக்கம். உலகிருளை உருவத் தொளியாலும் அகவிருளை அருளொளியாலும் நீக்குகின்றன ரென்பது நூற்றுணிபாகலின், மூலைக்கலுழ

நடம்புரிவான் - என்பதற்கு (திருமேனிப்பிரகாசத்தால்) திகாந்தங்களிலே புறத்திருள்போய்விழ நடம்புரிவான் எனப் பொருள்கொள்ளினு மமையும். (கரு)

தெய்வசிகாமணியேமணிகூடலிற்சென்றுவிற்ற
மெய்வசிகாமணிகண்டாபழமலைவித்தகமீ
னெய்வசிகாமணிமாவெனுங்கண்ணிணையநெஞ்சகத்து
வைவசிகாமண்ணினோவாதெனையின்பவாழ்வளித்தே.

(இ-ள்.) தெய்வசிகாமணியே - தெய்வங்களுக்கெல்லாம் சிரோரத்தினமானவரே,—கூடலில் சென்று மணி விற்ற மெய் வசிகா-மதுரைவீதியிலேபோய் அரதனங்களைவிற்ற உண்மையான வைசியரே,—மணிகண்டா-நீலகண்டரே,—பழமலை வித்தக - முதுகிரியில் வாழும் ஞான சொரூபரே,—மீன் நெய் வசி கா மணி மா எனும் கண்ணியை நெஞ்சகத்து வை - சேல் நெய்தடவியவாள் சோலையிடத்துள்ள அழகிய மாவடு என்று விதந்து சொல்லப்படும் கண்களையுடைய தலைவியை (உமது)திருவுளத்தில் வைத்துக் கொள்ளும்;—வசி-(உமதுரிமை நீக்கமின்றி இவளுடனே) வாசமாயிரும்;—மண்ணில் நோவாது இன்பவாழ்வு அளித்து எனை கா - இம்மண்ணுலகில் விதனப்படாமல் சுகவாழ்வைத்தந்து என்னையும் இரட்சியும். எ-று. [உடன்போக்கில் பாங்கி தலைமகளைக் கையடை கொடுத்துத் தலைவனுக் கோம்படை சாற்றல்.] வைசிகன் என்பது வசிகன் என மருவியது. (கசு)

வாழமரிக்குமடநெஞ்சமேமென்மலர்ப்பகழி
தாழமரிக்குமதற்காய்ந்ததந்தையுந்தாயுமொரு
வேழமரிக்குமிகவுறவாம்பழவெற்பினயல்
சூழமரிக்குமியல்பையெஞ்ஞான்றுந்துணிந்திலையே.

(இ-ள்.) வாழ மரிக்கும் மடம் நெஞ்சமே-(இப்பூமியிலே)வாழ்ந் திருக்கும்படி சிந்திக்கும் பேதைமனமே,— மென் மலர் பகழி அமர் தாழ் இக்கு மதன் காய்ந்த தந்தையும் தாயும் - மெல்லிய புட்பபா ணங்களையும் போர்த்தொழில் தங்கிய கருப்புவில்லையுமுடைய மன் மதனையெரித்த பிதாவாகிய பழமலைநாதரும் மாதாவாகிய பெரிய நாயகியாரும்,—ஒரு வேழம் அரிக்கு மிக உறவாம் பழவெற்பின் அயல் சூழ -ஒப்பற்ற யானைகள் சிங்கங்களுக்கு மிகவும் உறவாகக் கலந்துவாழும் முதுகிரியின் அயலிடத்திலே (பஞ்சாக்கரோபதேசம் செய்யும் பொருட்டு) எழுந்தருளிவர;—மரிக்கும் இயல்பை என்ஞா ன்றும் துணிந்திலை—இறக்கும் இயற்கையை எக்காலத்திலும் நீ துணிந் தாயில்லை. எ - று. இனியேனுந் துணிவாயென்பது எஞ்சி நின்றது. ஸ்மரிக்கும் என்னும்வடமொழி மரிக்குமென நின்றது. வாழமரிக்கு என்பதனை இக்கு வாழ அமர் எனமாற்றி, இப்பூமியினிடத்தே வாழ விரும்பும் பேதைமனமே எனப் பொருள்கொள்வதுமுண்டு. இப்பொ ருட்கண்ணே வாழ என்னும் பெயரொச்சத்தகரம் விகாரத்தாற்றொக் கது. இத்தலத்திலே, தேகாந்தியத்திலே, அம்பிகை மடிமிசைக் கிடத்திக்கொள்ள; வலதுசெவியிலே பழமலைநாதர் பஞ்சாக்கரோப தேசஞ்செய்து, ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கின்றனரென்பது சித்தாந்தமாகலின் தந்தையும் தாயும் அயல்சூழ மரிக்குமியல்பைத் துணிந்தாயில்லை என்றார். (கஎ)

துந்துமியும்பரியம்பும்பழமலைசூழ்ந்துளாயீர்
நுந்துமியும்பரியாவினையைவேண்டியுண்ணேம்புலவீர்
சிந்துமியும்பரிவாலுதவார்த்துதிசெய்வீர்மல
முந்துமியும்பரிபாகமுண்டோசொல்லுமுங்களுக்கே,

(இ-ள்.) துமியும் பரிரும் ஆவியை வேண்டி உள் நோம் புலவீர்-தும்மினும் நீங்குகின்ற உங்களுடைய ஆன்மாவை (உடலோடு)வாழவேண்டி உள்ளம்வருந்தித் திரிகின்ற புலவீர்காள்,—சிந்து உமியும் பரிவால் உதவார் துதிசெய்விர்-சிந்திப்போகிற உமிகளையும் அன்போடுகொடுக்காத உலுத்தர்களைத் தோத்திரஞ்செய்கின்றீர்;— உம்பர் துந்துமி இயம்பும் பழமலை சூழ்ந்து உரையீர் - தேவர்கள் தேவதுந்துபியைமுழக்கும் முதுகுன்றத்தை வலம்வந்து புகழ்ந்துரைக்கமாட்டீர்: (இங்ஙனமிருக்கில்),— உங்களுக்கு மலமும் துமியும் பரிபாகம் உண்டோ சொல்லும் - நுமக்கு மலமும் மாயாகன்மங்களும் கெடாநின்ற பரிபாககாலம் உண்டாகுமோ? சொல்லுவீராக. எ-று. தும்மினும் என்பது துமியுமென நின்றது. செய்விர் காலமயக்கம். மலமுமென்ற உம்மையால், மாயாகன்மங்களும் வருவிக்கப்பட்டன.

கேட்டுப்புவனங்கொளவுமெண்ணேமெய்க்கிராதனின்முன்
னூட்டுப்புவனம்பயின்மான்றசையுண்டநாதனராப்
பூட்டுப்புவனங்கொளுமெய்ப்பழமலைப்புண்ணியன்றாள்
வேட்டுப்புவனம்பதினான்குநல்கினும்வேண்டலமே.

(இ-ள்.) முன்னாள் மெய் கிராதனின் வனம் பயில் மான் துப்பு தசை உண்ட நாதன் - முற்காலத்திலே உண்மையன்புவாய்ந்த திண்ணனால், காட்டிற்றிரியும் மானினது சுவையாராயப்பட்ட இறைச்சியையுண்டருளிய நாயகரும்—அரா பூண் துப்பு வனம் கொளும் மெய் பழமலை புண்ணியன் தாள் வேட்டு-நாகாபரணங்களையும் பவளம்போலும் நிறத்தையும் கொண்டுவிளங்கும் திருமேனியையுடைய பழமலையில் வீற்றிருக்கும் தரும சொரூபருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை (யாம்) விரும்பியிருத்தலால்,—உப்பு வனம் கே

ட்டு கொளவும் எண்ணேம்-உப்பிட்டநீரை பிறர்பாற்கேட்டு உட்கொள்ளவும் சிந்தியேம்;—புவனம் பதினான்கும் நல்கினும் வேண்டிலம் - (அதுவன்றியும் ஒருவர் வலியவந்து) பதினான்கு உலகங்களையும் ஆளும்படி கொடுப்பினும் விரும்பேம். எ-று. எனவே வீடுபேற்றை விரும்பியிருத்தலால் இம்மைமறுமையின்பங்களை விழையேம் என்பதாம். உப்பிட்ட நீர் - புற்கையுணவு. வேட்டு வினையெச்சத்திரிபு. (கக)

வேண்டவடுக்கநினைவதுன்றாண்மலர்வேட்கைமணி
பூண்டவடுக்கணறுநுதலார்மயல்போக்குவது
நீண்டவடுக்கனயமாதிளமுலைநேர்ந்துதவ
மாண்டவடுக்கணிகர்தோட்பழமலைமன்னவனே.

(இ-ள்.) நீண்ட அடுக்கல் நயம் மாது இளமுலை நேர்ந்து உதவ-நெடிய இமயமீன்ற இன்பம்பொருந்திய உமாதேவியினுடைய முற்றாமுலைகள் (காஞ்சியிலே) அணைந்துகொடுக்க—மாண்ட வடுக்கள் நிகர் தோள் பழமலை மன்னவனே - மாட்சிமைப்பட்ட அம்முலைத் தழும்புகளோடு (வளைத்தழும்புகளும்) ஒளிர்கின்ற தோள்களையுடைய பழமலைநாதரே,—வேண்ட அடுக்க நினைவது உன் மலர் தாள் வேட்கை - விரும்பி அடையநினைவது உம்முடைய தாமரைமலர்போலும் திருவடியினிடத்து அன்பேயாம்;—போக்குவது மணி பூண்ட வடு கண் நறு நுதலார் மயல்-நீக்குவது கருமணிகொண்ட மாம்பிஞ்சின் பிளப்பைநிகர்த்த கண்களையும் நல்ல நெற்றியையுமுடைய மங்கையரது மயக்கமேயாம். எ-று. வேண்ட என்பது வினையெச்சத்திரிபு. வடுக்கள் நிகர் தோள் என்பதற்கு தழும்புகள் ஒன்றுக்கொன்று உவமையாகத்தோன்றும் புயங்களெனக் கொள்வதும்வழக்கம்.

மன்னவமாதவனும்பழமலைவாண்மணி
யன்னவமாதவனன்மலைக்காற்கசைந்தம்மதிகண்

டென்னவமாதவனல்லின்வந்தானென்றிரங்கிமதன்
றின்னவமாதவநோமேயென்செல்வத்திருந்திழையே.

(இ-ள்.) மன்னவ - (எவ்வுலகிற்கும்) இறைவரே,—மாதவன் நாடும் பழமலை வாண-மாயவன் தேடித்திரியும் முதுகிரியில் வாழ்பவரே,—மணி அன்னவ-மாணிக்கம்போல்பவரே,—என் செல்வம் திருந்திழை - என்னுடைய செல்வம்போலும் திருந்திய ஆபரணத்தையுடையபெண்,—மாதவன் நல் மலை காற்கு அசைந்து-பெருமைதங்கிய தவத்தையுடைய அகத்தியமகாமுனிவர்தங்கும் நல்ல பொதியமலையினின்றும் வருகின்ற தென்றலுக்கு வருந்தி,—அம் மதி கண்டு என்னவம் ஆதவன் அல்லின் வந்தான் என்று இரங்கி-அழகிய சந்திரனைப்பார்த்து இஃதென்னபுதுமை! (பகற்காலத்துதிக்கும்) சூரியன் இரவிலேவந்துவிட்டான் என்று (மயங்கியுளைந்து) அழுது,—மதன் தின்ன தவ நோமே அம்மா-மன்மதன் உயிரைக்கவர்ந்துண்ண மிகவும் நோகலாமா? ஆச்சரியம். எ-று. [நற்றாயிரங்கல்.] அமா இடைக்குறை. (உக)

திருந்தியவேதம்புகல்பரிசேயறஞ்செய்துடலம்
வருந்தியவேதம்பொருளெனவாழ்பழமாமலையான்
பொருந்தியவேதந்தருநஞ்சுணனெனிற்பூமலர்கா
மருந்தியவேதம்புயமனையாட்கணிமங்கலமே.

(இ-ள்.) பூ மலர் காமர் உந்திய - செந்தாமரைமலர்போலும் விரிந்த அழகிய நாபியையுடைய மாயவனே?—திருந்திய வேதம் புகல் பரிசே அறம் செய்து உடலம் வருந்தியவே - திருத்தமாகிய வேதங்களுரைக்கும் விதிப்படியே சிவபுண்ணியங்களைச்செய்து தேகம்வருந்திய ஆன்மாக்களே—தம் பொருள் என வாழ் மா பழமலை

யான் - தம்முடைய செல்வமென்று கைக்கொண்டு வாழும் பெருமைதங்கிய பழமலைநாதரானவர்,—பொருந்திய ஏதம் தரும் நஞ்சு உணுன் எனில் - நிலைபெற்ற துக்கத்தைவிளைத்த ஆலகாலவிடத்தை உண்ணுது விடுவாராகில்,—அம்புயம் மனையாட்கு அணி மங்கலம் ஏது-தாமரையாசனத்தையுடைய நின்மனையாட்டிக்கு நீதரித்த மங்கலநாண் எப்படிநிலைபெறும். எ-று. வருந்திய வினையாலணையும்பெயர். ஏகாரம் ஏனை ஆன்மாக்களைப்பிரித்துநிற்றலின் பிரிநிலை. தரும் காலமயக்கம். (உஉ)

மங்கலமாவிமலைசேர்பழமலைவாண மணிச்
செங்கலமாவிமலர்க்கைக்குருகொடுசெல்கவெமர்க்
கிங்கலமாவிவளைநீயணைந்த தினியுனெதிர்
தங்கலமாவிதரிற்கொடுசேறுமெந்தண்மனைக்கே.

(இ-ள்.) மங்கலமா விமலை சேர் பழமலை வாண - நித்தியகலியாணமாக விருத்தாம்பிகைகூடி மகிழ்ந்திருக்கும் முதுகிரியில்வாழ்பவரே,—எமர்க்கு இங்கு அலமா இவளை நீ யணைந்தது (நன்று) - எம்முடைய சுற்றத்தாருக்கு இவ்விடத்திலே துன்பம் விளைய இத்தலைவியை நீர்களவிற்புணர்ந்து கைவிட்டது நன்முயிருந்தது;—ஆவி மலர் கை குருகொடு மணி செம் கலம் செல்க - தடாகத்திற்பூத்த தாமரைமலர்போன்ற கையிலணிந்த வளையலோடும், இரத்தினங்கள் பதித்த சிவந்த பொன்னுபரணங்கள் நீங்கினும் நீங்குக;—இனி உன் எதிர் தங்கலம் - இனி உன்முன்னே நிற்கமாட்டோம்:—ஆவி தரில் எம் தண் மனைக்கு கொடு சேறும் - இவளுயிரைமாத்திரம் நீர்கொடுத்துவிட்டால் எமது தண்மைபொருந்திய வீட்டிற்குக் கொண்டுசெல்லுதும். எ-று, [பிரிந்துநீட்டித்த தலைவன்வந்துழிப் பாங்கி இற்பழி

கூடி வளைவுபடாதல்.]. நன்று என்பது சொல்லெச்சம். மங்கலமாக அலமாக என்பவற்றுள் ஈறு குறைந்தன. (உரு)

தண்டங்கமண்டலங்கொண்டுபழமலைச்சங்கரதாட்
புண்டங்கமண்டலங்கண்டுசென்றாலுமெய்ப்போதமுறார்
பண்டங்கமண்டலங்காரமின்னாக்கினன்பாட்டியலைக்
கொண்டங்கமண்டலம்பாழாக்கியவுனைக்கூறலரே.

(இ-ள்.) பழமலை சங்கர - முதுகிரியில்வாழும் சங்கரனே,— பண்டு அங்கம் மண்டு அலங்காரம் மின் ஆக்கினன் பாட்டு இயலை கொண்டு - முற்காலத்திலே எலும்பை நெருங்கிய அழகையுடைய பெண்ணாக்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருரைத்த அருட்பாவினிலக்கணத்தைக் கொண்டு,— அங்கு அமண் தலம் பாழாக்கிய உனை கூறலர் - மதுரையில் சமணரிருந்த இடங்களையெல்லாம் பாழ்படச் செய்தருளிய தேவரீரைத் தோத்திரஞ் செய்யாதவர்கள்,—தண்டம் கமண்டலம் கொண்டு - (சந்நியாசிகளாய்) தண்டத்தையும் கமண்டலத்தையுங் கைக்கொண்டு,—தாள் புண் தங்க மண்டலம் கண்டு சென்றாலும் மெய் போதம் உறார் - கால்களிலே புண்படும்படி இப்பூமியிலே(பலதலங்களைத்)தெரிசித்துத் திரிந்துவந்தாலும் உண்மையாகிய ஞானத்தையுடையமாட்டார்கள். எ-று. தலயாத்திரையினும் அருட்பாக்களையோதுதலே ஞானத்திற்கு முக்கிய ஏதுவென்பது கருத்து.

கூற்றைக்கொடியங்கடப்பானருளெனக்கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங்கரஞ்சேர்பழமலையீசனணி
கீற்றைக்கொடியங்குளமேவெறுத்திநிறைபெருகு
மூற்றைக்கொடியங்கினமோடருந்துமுடம்பினையே.

(இ-ள்.) தியங்கு உளமே - உண்மையுணராது உழலுமனமே,— கோடியம் கூற்றை கடப்பான் அருள் என கூய் பரவி - கொடியே மாகிய யாம் இயமனை வெல்லும்பொருட்டுக் கிருபைசெய்யென்று முறையிட்டுக்கூவித் தோத்திரஞ்செய்து,— ஏற்றை கொடி அம் கரம் சேர் பழமலை ஈசன் அணி நீற்றை கொள் - இடபக்கொடியானது அழகிய கரத்திற்றங்கிய முதுகிரிநாதரணிந்த விபூதியைப் பொருளாகக் கைக்கொள்;—நிறை பெருகும் ஊற்றை - (மலங்கள்) நிறைந்து (நவத்துவாரங்களினும்) ஒழுகும் ஊற்றையுடைய—அங்கு கொடி இனமோடு அருந்தும் உடம்பினை வெறுத்தி - சுடலையிலே காக்கை தனது சுற்றத்தோடும் தின்னப்பட்ட இத்தேகாபிமானத்தை வெறுத்துவிடுவாயாக. எ-று. ஏற்றுக்கொடி ஐகாரச்சாரியை பெற்று நின்றது. நிறைந்து என்னும் எச்சம் நிறை என நின்றது. ஊற்றை உடம்பு என இயையும். (உ௫)

உடற்குவலையந்தகன்கைக்கயிறென்றுணர்ந்துளமே
கடற்குவலயம்புகழ்சீர்முதுகிரிக்கண்ணுதற்கு
மடற்குவலயம்புரைகளத்தாற்குநம்மன்றமர்ந்த
நடற்குவலயம்பணியாமவற்கன்புநண்ணுகவே.

(இ-ள்.) உள்மே-மனமே, உடற்கு வலை அந்தகன் கை கயிறு என்று உணர்ந்து-உயிராகிய பறவையைப் பிடித்தற்கு வலையாவது இயமனது கையிலுள்ள பாசக்கயிறென்பதை அறிந்து,—கடல் குவலயம் புகழ் சீர் முதுகிரி கண்ணுதற்கு-கடலாற்சூழப்பட்ட பூமியிலுள்ளவர் புகழாநின்ற சீர்த்திபெற்ற பழமலையில்வீற்றிருக்கும் நெற்றிக்கண்ணையுடையவரும்—மடல் குவலயம் புரை களத்தாற்கு-(விடத்தால்)இதழையுடைய கருங்குவளைபோலும் கண்டத்தையுடை

யவரும்—நம் மன்று அமர்ந்த நடற்கு - நம்முடைய கனகசபையி லே நிலைபெற்ற நடனத்தையுடையவரும்—பணி ஆம் வலயம் அவற்கு - பாம்புகளாகிய கைக்கடகங்களையுடையவருமாகிய சிவபெருமானுக்கு—அன்பு நண்ணுக- அன்பைச் செய்வாயாக. எ-று. உடல் ஆகுபெயர். இது ஏகதேசவுருவகம். (உசு)

நட்டுவனுரையறிகிலன்றண்ணுமைநந்திநின்று
கொட்டுவனாரையிரைதேர்கயமுதுகுன்றுடையாய்
தட்டுவனாயகலாதநான்முகன்றாளமுயர்
குட்டுவனாவளவான்பரவுநின்கூத்தினுக்கே.

(இ-ள்.) நாரை இரை தேர் கயம் முதுகுன்று உடையாய் - நாரைகள் இரைகளைத் தேடித்திரிகின்ற தடாகஞ்சூழ்ந்த பழமலையையுடையவரே—உயர் குட்டுவன் ஆரை வளவான் பரவும் நின் கூத்தினுக்கு-உயர்ந்த சேரனும் ஆத்திமாலையைத்தரித்த சோழனும் வணங்காநின்ற தேவரீருடைய நடனத்திற்கு,—நந்தி நின்று தண்ணுமை கொட்டுவன்-நந்திதேவர் (பின்னே) நின்று மத்தளமுழக்குவர்;—நாயன் அகலாத நான்முகன் தாளம் தட்டுவன் - அன்பைநீங்காத பிரமதேவர் தாளத்தையடிப்பர்;—நட்டுவனுரை அறிகிலன்-ஆட்டிவைப்பார் ஒருவரையும் (யான்) அறிகிலேன். எ-று. நட்டுவனர் என்பதில் ஆர் விகுதி உயர்த்தற்கண் வந்தது. சிந்தித்துணருங்கால், சிவபெருமான் திருவருட்டிருமேனிகொண்டு ஆன்மாக்களையியக்க ஐந்தொழினடகம் நடிப்பவரேயன்றித், தம்மையியக்கும் வேறொரு தலைவரையுடையரல்லர் என்பது கருத்து. (உஎ)

கூத்துகந்தம்பலமேவுறுமோர்முதுகுன்றனைநம்
பாத்துகந்தம்பலமாரினுமெள்ளினும்பண்பனைத்தாள்

சாத்துகந்தம்பலமாமறையாற்புகழ்தாணுவைநா
மேத்துகந்தம்பலமார்பொதுமாதனையெள்ளினமே.

(இ-ள்.) நாம்-யாம்,—தம்பலம் ஆர் பொது மாதனை எள்ளினம்-(பலரும் மென்றுமிழாநின்ற) தம்பலச்சாற்றைப் புசிக்கும் வரைவின்மகளிரது சிற்றின்பத்தை இகழ்ந்துவிட்டேம்;—கூத்து உகந்து அம்பலம் மேவுறும் ஓர் முதுகுன்றனை - நடனத்தைவிரும்பிக் கனகசபையிலே வீற்றிருக்கும் ஒப்பற்ற பழமலைநாதரும்—நம் பா அம்பலம் ஆரினும் அகந்து எள்ளிலும் தாள் சாத்து பண்பனை - நமது பாமாலையிலுள்ள அழகிய பிரயோசனத்தை (வித்துவசபையோர்) அங்கீகரிப்பினும் (பொறாமையால்) கசந்து இகழ்ந்தாைப்பினும்,—(உண்மைநோக்கித்) தமது திருவடியிற் றரித்துக்கொள்ளும் குணமுடையவரும்—பல கந்தம் மாமறையால் புகழ் தாணுவை ஏத்துகம்-பல சாகைகளையுடைய பெரிய வேதங்களினால் துதிக்கப்பட்ட தாணுவுமாகிய சிவபெருமானை இனி ஏத்தக்கடவோம். எ-று. தாள்சாத்தலாவது தாள்களிலேவிழுமாறு தோள்களிற்றரித்தல். ஸ்கந்தம் என்னும் வடமொழி கந்தமெனநின்றது. (உஅ)

எள்ளாதவனையெலும்பாபழமலையென்றிருந்த
கள்ளாதவனைமகவரிந்தாக்கெனக்கட்டுரைத்து
விள்ளாதவனைமகிழ்பரமாவழல்வெண்மதியத்
தள்ளாதவனைமுடிசூடெம்மாதுதருக்குதற்கே.

(இ-ள்.) எள்ளாத வனை எலும்பா - இகழப்படாத அலங்கரிக்கப்பட்ட எலும்புமாலையையணிந்தவரே,—பழமலை என்று இருந்த கள்ளா - (அவயவங்களைமறைத்து) முதுகிரிவடிவாயிருக்கும் திருடரே,—தவனை மகவு அரிந்து ஆக்கு என கட்டுரைத்து அவனை விள்

ளாது மகிழ் பரமா - தவமிகுந்த சிறுத்தொண்டநாயனாரிடத்தே புதல்வனையரிந்து கறிசமைத்திடுகவென்று கட்டளைபுரிந்து (அதில் மாறுபடாமைநோக்கி) அவரை நீக்காது மகிழ்ந்து அடிமைகொண்ட மேலானவரே,— எம் மாது தருக்குதற்கு - எங்களுடைய பெண் களித்து வாழும்பொருட்டு,— முடி அழல் வெண்மதியை தள்ளு ஆதவனை சூடு—திருமுடியில் (அணியப்பட்டுத்) தழலைப்பரப்பிநிற்கும் வெள்ளிய சந்திரனை நீக்குவீராக; சூரியனைத் தரிப்பீராக. எ-று. [இது சந்திரோபாலம்பனம்.] எள்ளாத எனும்பாஎன இயையும். தவனை வேற்றுமைமயக்கம். (உ௧)

தருவினிலையினிமன்னவற்கில்லையித்தண்புனத்தின்
மருவினிலையினிமைக்கூற்றெனக்கந்திவானநிக
ருருவினிலையினியல்வேற்குகனையுதவியகோன்
கருவினிலையினிகந்தோன்பழமலைக்காரிகையே.

(இ-ள்.) அந்தி வானம் நிகர் உருவினில் ஐயின் இயல் வேல் குகனை உதவிய கோன்-மாலைக்காலத்திலேதோன்றும் செவ்வானம் போன்ற சிவந்ததிருவுருவத்தோடு, அழகின் இயற்கையைப்படைத்த வேலாயுதத்தையுமுடைய முருகக்கடவுளைப்பெற்ற இறைவரும்— கருவின் நிலையின் இகந்தோன்-(ஏனைத் தெய்வங்கள்போலக்) கருப்பாசயத்திற்றங்கிப் பிறத்தலாகிய நிலையினின்றும் நீங்கினவருமாகிய சிவபெருமானுடைய—பழமலை காரிகையே - முதுகிரியில்வசிக்கும் பெண்ணே,—மன்னவற்கு இனி தருவின் இலை இல்லை - இறைவருக்கு இனி (பறிக்கும்படி நமது புனத்தைச்சூழ்ந்த) மரங்களினிடத்தே தழைகளும் இல்லை;—இத் தண் புனத்தின் மருவின் இனிமைக்கூற்று எனக்கு இலை-அவர் இக்குளிர்ந்த தினைப்புனத்தின்கண்ணே வந்தால்

(அவர்க்குச்சொல்லவேண்டிய) இனிய வசனங்களுள் என்னிடத்தே ஒன்றுமில்லை. எ-று. [இறைவிக்கவன்குறை இருளைசாற்றல்.] நெடு நாளாய் நமக்குக் கையுறையாகப் பறித்துவந்தமையால் தருக்களிற் றழையற்றன. அதனை ஏலாது சதுர்வித உபாயங்களாலும் மறுத்த லால் என்னிடத்து இனியமொழிகளற்றன. இனிவரின் இயம்பற்பா லதை நீ இசைப்பாயாக எனப் பாங்கி தலைவிகுறிப்பறிந்தது. எனக் கு வேற்றுமைமயக்கம். (௯௰)

காரிகையார்க்குவரும்பொதுவோவல்லகாண்விசும்பிற்
பூரிகையார்க்குமுதுகுன்றநாயகன்பொங்குமருள்
வாரிகையார்க்குமருந்தனையான்மலைமன்னனரு
ளாரிகையார்க்குமெழுவுறழ்தோட்கணறுநுதலே.

(இ-ள்.) நறுநுதலே-நல்ல நெற்றியையுடையபெண்ணே,— விசும்பில் பூரிகை ஆர்க்கும் முதுகுன்றம் நாயகன் - ஆகாயத்திலே (தேவர்களாற்) பூரிகைமுதலிய வாத்தியங்கள் முழங்கப்படுகின்ற பழமலைநாதரும்—பொங்கும் அருள் வாரி - பெருகாநின்ற கிருபா சமுத்திரரும்—கையார்க்கு மருந்து அனையான் - வெறுக்காத அன் பர்களுக்கு அமுதம்போன்றினிப்பவருமாகிய சிவபெருமானுடைய— மலைமன்னன் அருள் நாரி கை ஆர்க்கும் எழு உறழ் தோட்கள்-பரு வதராஜன்பெற்ற உமாதேவியார் (தமக்கே உரியனவாகக்) கைக ளாற் கட்டியணைக்கும் எழுத்தம்பநிகர்த்த தோள்களானவை,— காரிகையார்க்கு வரும் பொதுவோ அல்ல காண் - ஏனை மடந்தை யர்க்கு (நினைத்தபடியணைய) வரும் பொதுவாந் தன்மையனவோ? அல்ல: காண்பாயாக. எ-று. [நற்றாய் தலைவியை முனிந்துரைத்தல்.] மருந்தனையான் தோட்களென இயையும். (௯௧)

நுதலரிக்கும்பருவங்குறையென்றவனேக்கடையா
முதலரிக்கும்பருமேத்துந்தமிழர்முருகுபெரு
குதலரிக்கும்பருகற்கருங்காமுதுகுன்றரிலார்
சிதலரிக்கும்பருமாமரம்போற்றுயர்தின்பவரே.

(இ-ள்.) நுதல் அரிக்கும் பருவம் குறை என்று அவன் நோக்கு அடையா முதலர் - (மூவரிலொருவராகச்) சொல்லப்படும் திருமாலுக்கும் பக்குவங்குறைவென்று அவருடைய ஊனக்கண்களுக்குத் தெரிசனமாகாமலிருந்த முதற்கடவுளானவரும்—இக் கும்பரும் ஏத்தும் தமிழர்-இந்த அகத்தியமகாமுனிவரும் துதிக்கும் தமிழில்விருப்பமுடையவரும்—பெருகுதல் முருகு அரிக்கும் பருகற்கு அரும் கா முதுகுன்றர் இலார்-(பூக்களினிடத்தே) பெருகுதலாகிய தேனை வண்டினங்களுக்கும் புசித்தற்கருமையாகும்படி உயர்ந்த சோலைகள் சூழ்ந்த மழமலையாதருமாகிய சிவபெருமானுடைய அருளைப்பெறாதவர்கள்,—சிதல் அரிக்கும் பரு மாமரம் போல் துயர் தின்பவர்-கறையானால் அரிக்கப்படும் பருத்த மாமரம்போல, துக்கங்களாலே தின்னப்பட்டவர்களாவார்கள். எ-று. அருள் என்பது சொல்லெச்சம்.()

தின்னக்கனியைவிழைகூனிளமந்திதீங்கனியீ
தென்னக்கனியையிரவியிற்பாய்பொழிலீண்டுகுன்றை
நன்னக்கனியைமதிவேணியணிந்தநாம்பயந்த
சின்னக்கனியைவலத்தில்வைத்தால்வருந்தீங்கென்னையே.

(இ-ள்.) தின்ன கனியை விழை கூன் இள மந்தி தீம் கனி ஈது என்ன - புசித்தற்குப் பழத்தைவிரும்பிய கூனிய இளம்பருவத்தையுடைய பெண்குரங்கானது மதுரம்பொருந்திய கனி இதுவென்று கருதி,—கன்னி ஐ இரவியில் பாய் பொழில் ஈண்டு குன்றை நல் நக்கன் - குன்றுதலில்லாத அழகையுடைய சூரியனிடத்தே பாய்கின்ற

சோலைகள்நெருங்கிய முதுகுன்றத்தில் வீற்றிருக்கும் நல்ல திருவாணியானவரும்—மதி இயை வேணியன்-சந்திரன் றங்கிய சடையையுடையவருமாகியசிவபெருமான்,—நாம் பயந்த இந்த சின்ன கன்னியை வலத்தில் வைத்தால் வரும் தீங்கு என்னை- நாம்பெற்ற இச்சிறு கன்னியை வலதுபுறத்தில் வைத்துக்கொண்டால், (அதனால் அவருக்கு) வரும் குற்றம் யாது? நீ கூறுவாயாக. எ-று. [இது நற்றாய் செவிலியைவினுதல்.]கன்னி என்பன இடைக்குறைந்துநின்றன. (நுகூ)

தீங்குதிரைக்கடனேர்நரர்காடுயர்செய்மலத்திற்
காங்குதிரைக்கடநாய்க்கிரையென்றிந்தவாகமய
னீங்குதிரைக்கடநன்முதுகுன்றர்க்கந்நிம்பனுக்கு
வாங்குதிரைக்கடனீயவல்லார்க்குவணங்குமினே.

(இ-ள்.) திரை கடல் சேர் தீங்கு நரர்காள்- அலைகடல்போலச் சம்பாதித்த தீமைகளையுடைய மனிதர்களே,—துயர் செய் மலத்திற்கு ஆம் குதிர்-துக்கத்தை விளைவிக்கும் மும்மலத்திற்கிடமான கூடு,—ஐ கடம் - சிலேத்துமங்களை நிரப்பிவைத்த குடம்,—நாய்க்கு இரை என்று-(உயிர்நீங்கியவழி) நாய்க்கு உணவாவம் பிணம் என்றறிந்து,—இந்த ஆகம் மயல் நீங்குதிர் - இத்தேகாபிமானத்தை விடுவீராக;—ஐ கடம் நல் முது குன்றர்க்கு - அழகிய காடுகள்சூழ்ந்த நல்ல பழமலைநாதரும்,—அந்நிம்பனுக்கு வாம் குதிரைக்கடன் ஈய வல்லார்க்கு வணங்கு மின் - அந்த வேப்பமாலையைத்தரித்த பாண்டியனுக்கு, தாவப்பட்டகுதிரைக்கடனை (மாணிக்கவாசகசுவாமிகளினிமித்தம்) கொடுக்கவல்லவருமாகிய சிவபெருமானுக்கு. (இனி) வணக்கஞ்செய்வீராக. (எறு.)

வணங்கக்கரமுமொழியப்பழமலைமன் னுருவா
யிணங்கக்கரமுமிருப்பவைத்தேபுணரேந்திழையார்

பிணங்கக்கரமுஞுமலியும்போலவர்பின்றொடர்வீ
ரணங்கக்கரமுதலைபோலுமைப்பற்றுமந்தகனே.

(இ-ள்.) (உலகீர்) பழமலை வணங்க கரமும் - பழமலைநாதனைத் தொழுதற்குக் கைகளும்,—மொழிய மன் உருவாய், இணங்கு அக்கரமும்-செபிக்க அக்கடவுளுடைய நிலைபெற்ற திருவுருவாகிக் கலந்து நிற்கும் பஞ்சாக்கரமும்,—இருப்ப வைத்து-இருக்க, (அவற்றாற்பெறப்படும் பிரயோசனங்களையடையாது) வைத்து,—புணர் ஏந்திழையார் பிணங்க கரமும் ஞமலியும்போல் அவர்பின் தொடர்வீர்-புணர்கின்ற மாதர்கள் பிணங்கிக்கொண்டுசெல்ல (அதனை நீக்குதற்குக்) கழுதையையும் நாயையும்போல காணமற்று அவர்பின் தொடர்ந்து உழல்வீர்;—அணங்க கர ம்முதலை போல் உமை பற்றும் அந்தகன் -(இச்செய்கையால் நீவிர்) வருந்தும்படி ஆண்முதலையைப்போல உங்களை விடாது பிடித்துக்கொண்டு செல்வன் இயமன். எ-று. கராமுதலை என்பது குறுகிற்று. அணங்கக்கரமுதலைபோல் என்பதனை முதலை அக்கு அர அணங்குபோல் எனமாற்றி, விடாது பிடித்தற்கு முதலையையும், வருத்துதற்கு அரவையும், தப்பாது கொல்லுதற்கு வனத்திற்றனித்தவழிமாய்க்கும் தெய்வகன்னியையும் உவமை கூறினர் எனக்கொள்ளினும் அமையும். அக்குஅர மணியையுடைய பாம்பு.

அந்தரங்கங்கைதவரறியாமலமுதருள்சம்
பந்தரங்கங்கைவலிபோன்மின்னுக்கினர்பாடியுனைச்
செந்தரங்கங்கைரவமொண்கமலந்திரைத்துவருஞ்
சுந்தரங்கங்கைவிரும்புமுத்தாறுடைத்தொன்மலையே.

(இ-ள்.) செம் தரங்கம் கைரவம் ஒண் கமலம் திரைத்து வரும் சுந்தரம்-செவ்விய அலைகள் அல்லிகளையும் அழகிய தாமரைகளையும் (பிடுங்கி) அலைத்துக்கொண்டுவருகிற அழகைப்பார்த்து—

கங்கை விரும்பும் மூத்தாறுடை தொன்மலையே-கங்காநதியும் (இப்படிப்பட்ட அழகு நமக்குண்டாகவேண்டுமென்று) இச்சிக்கப்படுகின்ற மணிமுத்தநதியையுடைய பழமலைநாதரோ,—சம்பந்தர் உனை பாடி கைவலிபோல் அங்கம் மின்னாக்கினர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவரீரைத் துதித்துத் (தமது) கைவலிகாட்டுவார்போல எலும்பைப்பெண்ணாக்கினர்;—அமுது கைதவர் அறியாமல் அந்தரங்கம் அருள் - (இப்படிப்பட்ட சிறப்பையளிக்கும்) ஞானப்பாலை வஞ்சகரறியாதபடி இரகசியமாக (அடியேனுக்கும்) தந்தருளும். எ-று. (௩௬)

மலங்கலையங்கலைகற்றேன்றனக்கருள்வாழ்வளிப்போன்
கலங்கலையங்கலைநல்லோர்பரவுங்கழலடியான்
விலங்கலையங்கலைவேலோன்பிதாமூதுவெற்பிடத்திற்
பொலங்கலையங்கலையான்மூடுமீனைப்புதைத்தவளே.

(இ-ள்.) அம் கலை கற்றேன் தனக்கு அருள் வாழ்வு அளிப்போன்-(தமது) அழகிய நூல்களைக் கற்ற எனக்கு அருளாகிய பெரியவாழ்வைத் தருபவரும்—ஐயம் கலங்கல் கலை நல்லோர் பரவும் கழல் அடியான் - சந்தேக விபரீதங்களை ஒழித்த ஞானிகள் துதிக்கும் வீரக்கழலையணிந்த திருவடியையுடையவரும்,—விலங்கலை அலை வேலோன் பிதா மூதுவெற்பு இடத்தில்-கிரவுஞ்சமலையைப்பிளந்த வேற்படையையுடைய முருகக்கடவுளது பிதாவுமாகிய சிவபெருமானது பழமலையினிடத்தே,—மீனை புதைத்தவளே மலங்கலை பொலம் கலையம் கலையால் மூடு - (மறைக்கத்தகாத) மீன்போலுங் கண்களை மறைத்தவளே, மயங்காதே; தனங்களாகிய பொற்குடங்களை முன்றானையால் மறைப்பாயாக. எ - று. [நாணிக்கண்புதைத்தல்] அங்கு அசை. (௩௭)

புதைத்துக்கரக்கும்பொருளாளர்வெஞ்சொற்பொருமறலி
கதைத்துக்கரக்குங்குமமுலைபாகன்மெய்க்கண்டடியார்
பதைத்துக்கரக்குஞ்சிறிதாவுருகும்பழமலையான்
வதைத்துக்கரக்குஞ்சரமீர்ந்தவன்றரும்வாழ்விலரே.

(இ-ள்.) பொருள் புதைத்து கரக்கும் ஆளர்-தமது பொருளை (மண்ணிற்) புதைத்துவைத்து (இரப்போர்க்கு) ஒளித்துவைக்கும் உலோபிகள்,—வெஞ்சொல் பொரும் மறலி கதை துக்கர்-கடுஞ்சொற்களோடு மோதுகின்ற இயமனது கதையினலாகிய துக்கத்தையுடையராவர்; (அன்றியும்);—அக் குங்கும முலை பாகன் - அக்குங்குமக் குழம்பணிந்த தனங்களையுடைய உமாதேவியாரதுபாகரும்,—அடியார் மெய் கண்டு பதைத்து அரக்கும் சிறிதா உக்கு உருகும் பழமலையான் - அடியவர்கள், தமது திருமேனியைத் தரிசித்து உடலிநடுங்கி (நெருப்பிலிட்ட) அரக்கும் சிறிதாகும்படி நெகிழ்ந்துருகுதற்கேதுவாகிய பழமலையையுடையவரும்—கர குஞ்சரம் வதைத்து ஈர்ந்தவன் - துதிக்கையையுடைய யானையைக்கொன்று உரித்தவருமாகிய சிவபெருமானல்,—தரும் வாழ்வு இலர்-கொடுக்கப்படும் பேரின்பவாழ்வும் இலராவர், எ-று. சிறிதாக என்பது கடைக்குறையாயிற்று. ()

இலங்குமரியுமருள்கோன்முதுவெற்பிடத்தாரற்கால்,
விலங்குமரியுமுழலலெல்லாமுன்னிவெய்துயிராக்
கலங்குமரியுமிருந்துயர்கூருங்கவுழ்ந்திடுந்தாய்க்
குலங்குமரியுமொருவனும்போகுங்கொடுஞ்சுரத்தே.

(இ-ள்.) தாய்க்குலம் - ஐவகைத் தாய்மார்கூட்டங்களும்,— இலங்கும் அரியும் மருள் கோன் முதுவெற்பு இடத்து-விளங்காநின்ற விட்டுணுவும் தேடி மயங்காநின்ற இறைவனது பழமலையினிடத்தி

லே—குமரியும் ஒருவனும் போகும் கொடும் சுரத்து - புதல்வியும் நாயகனும் (களவிலே உடன்) செல்லும் கொடிய காட்டுவழியிலே— உரல் கால் விலங்கும் அரியும் உழலல் எல்லாம் உன்னி-உரல்போலும் கால்களையுடைய யானைகளும் சிங்கங்களும் திரிதன்முதலியவற்றைச் சிந்தித்து,—வெய்து உயிரா கலங்கும் - வெப்பமாகப்பெருமூச்செறிந்து கலக்கமடையும்;—மரியும் இரும் துயர் கூரும் -இறத்தற்கேதுவாகிய பெரிய துக்கத்தை அதிகரிக்கும்;—கலுழ்ந்திடும்-கண்ணீர்விட்டழும். எ-று. [உடன்போக்கில் நற்றாய் முதலியதாய்மாரிரங்கல்.]()

கொடுவரியானையடர்ந்துறுமாறெனக்கொண்டுயர்தூ
ணொடுவரியானையுறவடிப்போமென்றொருங்குவந்தே
யடுவரியானைநிகர்நமன்றூதரடிநடுமுடிமன்
னடுவரியானைமுதுகுன்றொடேசுநரார்தமையே.

(இ-ள்.) அடி நடு முடி அரியானை முதுகுன்றொடு ஏசும் நரர் தமை - ஆதிமத்தியாந்த ரகிதராகிய சிவபெருமானை அவர்வீற்றிருக்கும் பழமலையென்னும் தலத்தோடு இகழ்ந்து பேசும் பாவிகளை,— யானை நிகர் நமன் தூதர் - (கருநிறத்தாலுங் கடுங்கோபத்தாலும்) யானையையொத்த யமதூதர்கள்,—கொடுவரி ஆனை அடர்ந்து உறுமாறு எனகொண்டு - புலியானது பசுவை நெருங்கிவந்து பிடித்துக்கொண்டு செல்லுந் தன்மைபோல (யாமும்) கொண்டுபோய்— உயர் தூணொடு வரியானையுற அடிப்போம் என்று ஒருங்கு வந்து அடுவர்-உயர்ந்த கம்பங்களிலே பிணித்து நைந்துபோகும்படி (தண்டத்தால்) புடைப்போமென்று கருதிச் சேர்ந்துவந்து கொல்வார்கள். எ-று. மன் அசை. (௩0)

நரகாவலர்மடவார்க்குள்ளுருகிக்கைந்நாவிருப்ப
வரகாவலர்புனைந்துன்றனையேத்திலராய்ந்தறிவா
லுரகாவலனெனவுய்ந்தாரினமுளமுற்றகுன்றைப்
புரகாவலரிலருட்கோயிலாகும்புராந்தகனே.

(இ-ள்.) ஆய்ந்த அறிவால் உரகா அலர் என உய்ந்தார் இனம் உளம் உற்ற குன்றை புர - (ஞானநூல்களை) ஆராய்ந்த நல்லறிவினால், நாகாபரணா, (சிவபோதத்தையடக்கிப்) பிரகாசிப்பாயாக. என்றுவேண்டிப் பிறவியினின்றும் நீங்கிய மெய்ஞ்ஞானிகளின்மனத்தில் வீற்றிருக்கின்ற பழமலைநாதரே,— காவலர் இல் அருள் கோயில் ஆகும் புராந்தகனே -, சிவகருணையுடையவரது வீட்டை அருண்மயமான ஆலயமாகக்கொண்டு விளங்குகின்ற புராரியே,—மடவார்க்கு உள் உருகி - பேதையர்களுடைய சிற்றின்பத்தின்பொருட்டு மனமுருகி,—கை நா இருப்ப கா அலர் புனைந்து உன்றனை அர ஏத்திலர் - கைகளும் நாக்களும் இருக்கவும் சோலையிலுள்ள மலர்களைச்சூடி தேவரீரை அரனே என்று துதியாதவர்கள்,—நரகு ஆவலர்- நிரயத்தின்கண்ணே ஆசையையுடையராவர்கள். எ-று. ஆய்ந்த என்னும்பெயரெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. கா வலர் இல் என்பதற்கு-காத்தலையுடைய வல்லகோலார் இல்லம் எனப் பொருள்கொள்வதும் வழக்கம். வல்லகோலார் என்பது அண்ணாமலைரெட்டியாரை உள்ளிட்டார்க்குத் தொன்றுதொட்டபெயர். இவர் தமதூராகிய துறைமங்கலத்திற்கும் பழமலைக்கும் நெடுந்தூரமிருக்கவும் நியதிபூண்டு வருந்திச்சென்று தரிசித்து வருங்காலத்தில், பழமலைநாதர் திருவுளமிரங்கி யாம் திருவெங்கையிற் றிருவுருக்கொண்டு விளங்குகின்றோம் என்றருளிச்செய்ய; அண்ணாமலைரெட்டியார் அவ்வாறே பரிசோதித்துச் சிவலிங்கமிருத்தல்கண்டு அரிய சிற்பங்களமைய ஆலயமமைத்து வழிபட்டுய்ந்தனர் என்பது சரித்திரம். (சுக)

புரந்தரனஞ்சுபழமலைவாணன்புலவர்தொழுந்
துரந்தரனஞ்சுதலைநாககங்கணன்றொண்டுறுமா
னிரந்தரநஞ்சுதொழுதேத்துதாதர்க்குநேயமொடு
வரந்தரநஞ்சுகளத்துவைத்தானென்பர்மாதவரே.

(இ-ள்.) மாதவர் - பெரியதவத்தையுடையோர்,— புரந்தரன் அஞ்சு பழமலைவாணன் - இந்திரன் பயந்துவழிபடும் முதுகுன்றத்தில் வாழ்பவரும்—புலவர் தொழும் துரந்தரன் - தேவர்களெல்லாம் வணங்கும் சுத்தவீரரும்—அஞ்சு தலை நாக கங்கணன் - அஞ்சுதலைகளையுடைய சர்ப்பகங்கணத்தையுடையவருமாகிய சிவபெருமான்,— தொண்டு உறும் மால்-தமக்குத் தொண்டுபூண்டொழுகும் விஷ்ணுமூர்த்தியும்—நிரந்தரம் நஞ்சு தொழுது ஏத்து தாதர்க்கு நேயமொடு வரம் தர- (தம்மை) எப்பொழுதும் மனமுருகி வணங்கித்துதிக்கும் தாசர்களுக்கு அன்போடு வரங்களைத்தந்து (ஓர்கடவுளாக) விளங்க,—நஞ்சு களத்து வைத்தான் என்பர்-விஷத்தைக் கண்டத்திலே அடக்கிவைத்தருளினார் என்றுசொல்லுவர். எ-று. (௩உ)

மாதனைக்கொன்றுவரம்மேனிவைத்தவமாசுணத்தை
யீதனைக்கொன்றுசிறுநாணென்றார்க்குமெழிலுடையாய்
நீதனைக்கொன்றுநலஞ்செயல்வேண்டுநினையிகழும்
வாதனைக்கொன்றுமுதுகுன்றமாநகர்மாசொழித்தே.

(இ-ள்.) மாதரை கொன் துவர் அம் மேனி வைத்தவ-(கங்கை உமை என்னும்) தேவிமார்களைப் பெருமைதங்கிய பவளம்போலும் அழகிய திருமேனியில் வைத்தவரே,—ஈது அரைக்கு ஒன்று சிறு நாண் என்று மாசுணத்தை ஆர்க்கும் எழில் உடையாய் - இது நம

திடைக்குப்பொருந்திய சிறிய அனாஞானுகுமென்று ஆதிசேஷனைக் கட்டுகின்ற அழகுடையவரோ,—நினை இகழும் வாதனை கொன்று முதுகுன்றம் மாநகர் மாசு ஒழித்து - தேவரீரை இகழ்ந்தனைக்கும் வாதிகளைக்கொன்று பழமலையாகிய பெரியதலத்திற்கு (அவர்களாலுண்டாகிய) பழிகளையும் நிவர்த்தித்து,—தனக்கு ஒன்று நலம் நீ செயல் வேண்டும்-இவ்வுலகத்திற்குச் (சிவபுண்ணியம் வளர்தற்கேதுவாகிய) ஓர் நன்னெறியை நீர் செய்துவைப்பீராக. எ-று.(௩௩)

மாசிய திகந்துறந்தார்மகிழ்குன்றைமாநகரோ
காசியதிகங்கொலோவென்பிராயினக்காசியெனப்
பேசியதிகந்தகன்றிருந்தான்பரன்பேரடலை
பூசியதிகம்பரனீங்கிலானிப்புரியினையே.

(இ-ள்.) அதிகம் துறந்தார் மாசி மகிழ் மா குன்றைநகர் அதிகமோ-(உலகீர்,) மிகுதியும் பற்றறத்துறந்தோர்களும் (திருவிழாக்காட்சியின்பொருட்டு) மாசிமாதவரவை விரும்பிநிற்கும் திருமுதுகுன்றமென்னுந்தலம் உயர்ந்ததோ?—காசி அதிகமோ என்பிர் ஆயின் - காசியென்னுந்தலம் உயர்ந்ததோ? என்று கேட்பீராயின்,—பரன் அக்காசி என பேசியது இகந்து அகன்று இருந்தான் - சிவபெருமான் அக்காசியென்று நீர்சொல்லிய தலத்தைத் (திவோதானனென்னும் அரசன்பொருட்டு) விட்டுப்பிரிந்து (நெடுங்கால மந்தரகிரியில்) வீற்றிருந்தனர்;—பேர் அடலை பூசிய திகம்பரன் இப்புரியினை நீங்கிலான் - பெரிய சுடலைப்பொடிபூசிய திகம்பரராகிய சிவபெருமான் இவ்விருத்தகாசியைக் கணப்பொழுதும் பிரிந்ததில்லை: ஆகலின், இதுவே உயர்ந்தது. எ-று. கொல் அசை. திவோதானன், அருந்தவமியற்றிப் பிரமதேவரால் காசியையாளும் அரசுரிமை பெறுங்காலத்து

அத்தலத்திலே தேவர்வாசமில்லாதிருக்க வரமேற்று, அதனை ஆண்டு கொண்டிருக்க; அப்பொழுது சிவபெருமான், அவ்வரம் பொய்க்காவண்ணம், மந்தரமலையையடைந்து அதன் வேண்டுகோளின்படி நெடுங்காலம்வீற்றிருந்து, பின்னர் திவோதானனைமுத்தியிற்சேர்த்துக் காசியை யடைந்தருளினர். இச்சரித்திரவிரிவைக் காசிகாண்டத்திற் காண்க. (௪௪)

புரிசடையாளபழமலைவாணபொருப்பெடுத்த
கரிசடையாளதிகந்தீர்த்தருளக்கடுவயின்ற
பரிசடையாளமுடையாயொழித்தனள்பட்டினையத்
துரிசடையாளதழுக்காமெனுநின்றுகிலினுக்கே.

(இ-ள்.) புரி சடை ஆள - கட்டிய சடைமுடியையுடையவனே,—பழமலை வாண - பழமலையில்வாழ்பவனே,—பொருப்பு எடுத்த கரி சடை ஆள் அதிகம் தீர்த்து அருள-கோவர்த்தனகிரியைக்(குடையாக) ஏந்திய கரியினுடையசமூகம்போலும் (காந்திபெற்ற) விஷ்ணுவினது பரத்துவவுயர்ச்சியை நீக்கும்பொருட்டு—கடு அயின்ற பரிசு அடையாளம் உடையாய் - விஷத்தையுண்ட தன்மையைக் (கண்டத்தில்) அடையாளமாக உடையவனே,—அத்துரிசு அடையாள் நின் துகிலினுக்கு அது அழுக்கு ஆம் எனு பட்டினை ஒழித்தனள் - அக்குற்றத்தையடையாத என்மகள் உம்முடைய புலித்தோலாகிய சித்திரவஸ்திரத்தைநோக்குங்காற் றன்னுடையவஸ்திரம் அழுக்காக இருக்கின்றதென்று மயங்கி உயர்ந்தபட்டினைஒழித்தனள். எ-று. [நற்றாயிரங்கல்.] உம்முடைய திகம்பரத்தை விரும்பித் தானும் திகம்பரியாயினள் எனினும் அமையும். துகிலினுக்கு வேற்றுமைமயக்கம். (௪௫)

துகிலங்குருகுந்துறந்தாளுயிருந்துறக்கநின்றா
ளகிலங்குருகுமணிமுடியாயெனுமத்தவளை
முகிலங்குருகுமடியாய்பரந்தமுதுகிரியாஞ்
சகிலங்குருகுலமேத்திறைவாமைத்தடங்கண்ணியே.

(இ-ள்.) அகிலம் குருகும் அணி முடியாய் எனும் அத்த-உலகிலுள்ளோர், (இளம்பிறை முதலியவற்றோடு குரண்டாசுரனென்னும்) கொக்கிறகையுந்தரித்த சென்னியையுடையவரோவென்று துதிக்கும் பிதாவே,—வளை முகில் உருகும் அடியாய் - சங்கையேந்திய விஷ்ணுவானவர் சிந்தித்துருகும் திருவடியையுடையவரோ,—பரந்த முதுகிரி ஆம் சகிலம் குருகுலம் ஏத்து இறைவா-(தேவரீர்) விரிந்தபழமலை வடிவமாக இருக்கும் சரிதத்தை (அறிந்து) குருவம்சத்தாரெல்லாம் (வந்து) துதிக்கும் தலைவரோ,—மை தடம் கண்ணி-மைதீட்டிய விசாலம்பொருந்திய கண்களையுடைய என்மகள்,—துகில் ஆம் குருகும் துறந்தாள் - (உடுத்த) புடைவையையும் அழகிய (கையிலணிந்த) வளையல்களையும் இழந்துவிட்டாள்;—உயிரும் துறக்க நின்றாள்-(இனி தனது) உயிரையும் இழக்கநிற்கின்றாள்: ஆகலின் விரைந்து அருள் புரிவீராக. எ-று. [நற்றாயிரங்கல்] துகிலும் என்னும் உம்மைதொக்கது. குருகு இறகை யுணர்த்தலின் ஆகுபெயர். கொக்குருவாகிய ஓரசுரன் அண்டங்களனைத்தையும் பொரிபோலக் கொறித்துக்கொறித்து உமிழ்ந்தவர; சிவபெருமான் அவ்வுருவத்தையழித்து இறகை அடையாளமாகத் திருமுடியிற்றரித்தருளினார் என்பது புராணசித்தாந்தம். அங்கு அசை. (௩௬)

தடுக்கமலத்தினெடுங்குதல்போலநின்றாளிலுறு
மொடுக்கமலத்தினிகழ்வால்வளையினமூர்ந்திடச்சேன்

மடுக்கமலத்திலுகள்வயல்சூழ்குன்றைமாநகரோ
யடுக்கமலத்திபுனையலங்காரவருளுகவே.

(இ-ள்.) அலத்தின் நிகழ்வால் வளையினம் ஊர்ந்திட - கலப்பைப்படையின் செல்லுகையாலுண்டாகிய வழியிலே சங்குக்கூட்டங்கள் தவழ்ந்துசெல்ல—சேல் மடு கமலத்தில் உகள் வயல் சூழ் மா குன்றை நகரோய்-கெண்டை மீன்கள் ஓடைகளிலுள்ள தாமரைகளிலே பாய்கின்ற வயல்கள் சூழ்ந்த முதுகிரியென்னும் தலத்தையுடையவரோ,—அடுக்கு அமல் அத்தி புனை அலங்கார - ஒன்றன்மேலொன்றாகக் கட்டப்பட்டு நெருங்கிய எலும்புமாலையையணிந்த அழகையுடையவரோ,—தடுக்க மலத்தின் ஒடுங்குதல் போல - (கேவலத்திலே) தடைசெய்ய ஆணவமலத்தில் நான் செயலற்றுக்கிடந்ததுபோல,—நின் தாளில் உறும் ஒடுக்கம் அருளுக - (சுத்தத்திலேயும்) தேவரீருடைய திருவடிகளில் (என்போதமற்று) இருக்கும் ஐக்கியத்தையும் தந்தருள்வீராக. எ-று. (௬௭)

அருவனாவில்லையுமிழ்மணிநாகமுமத்திகளு
முருவனாவில்லையெனப்பூண்பவனாயவ்வும்பர்தொழும்
பொருவனாவில்லையுறுமுதுகுன்றனைப்போந்துமரு
ளொருவனாவில்லைவரிலொற்றிவையெனவுற்றனமே.

(இ-ள்.) அருவனா - அரூபமானவரும்—வில்லை உமிழ் மணி நாகமும் அத்திகளும் உரு வனாவு இல்லை என பூண்பவனா - காந்தியைக் கக்காநின்ற அரதனங்களையுடைய பாம்புகளையும் எலும்புமாலைகளையும் திருமேனியிலே நீக்கமில்லையென்று சொல்லும்படி தரிப்பவரும்—அவ்வும்பர் தொழும் வனா பொரு வில்லை உறும் முதுகுன்றனை போந்து - அத்தேவர்களும் வணங்காநின்ற மேருமலையாகிய

போர்செய்யும் வில்லையுடைய பழமலைநாதருமாகிய சிவபெருமானைச் சேர்ந்து,—ஐவர் இல் உமருள் ஒருவனை வில் ஒற்றினவ என உற்றனம் - ஐம்புலமென்னும் அரட்டருலாவும் வீடாகிய எம்முடையவுடம்பை உமதன்பர்கூட்டத்துள் ஒருவருக்கு விற்றுவிடும். (அல்லது) அவரிடத்திலே ஒற்றிவையும் என்று விண்ணப்பஞ்செய்து அடைக்கலமாயினேம். எ-று. ஒருவனை வேற்றுமைமயக்கம். (௩௯)

உற்கைக்குமாறுபடுமணிநாகமொளித்துலவி
விற்கைக்குமாறுசுமந்தவசீர்முதுவெற்பினின்பா
னிற்கைக்குமாறுவழுவாநடக்கைக்குநேரிழையார்
சொற்கைக்குமாறுந்தமியேனுக்கென்றுதுணைசெய்வையே,

(இ-ள்.) நாகம் ஒளித்து உற்கைக்கு மாறு படும் மணி உலவி விற்கைக்கு மாறுசுமந்தவ-அரவாபரணங்களை ஒளித்துவைத்துவிட்டு, நெருப்பையுடையகொள்ளிக்கு வேறுபட்டுப்பிரகாசிக்கும் இரத்தினங்களை (மதுரைவீதியிலே) திரிந்து விற்கும்பொருட்டு மாறுவேடங்கொண்டு சுமந்துவந்தவரே,— சீர் முதுவெற்பில் நின்பால் நிற்கைக்கும் ஆறு வழுவா நடக்கைக்கும் - சீர்த்திபெற்ற விருத்தாசலத்தினிடத்தே (எப்பொழுதும்) உம்முடையசந்நிதியில் நிற்றலுக்கும் ஒழுக்கம் வழுவாது நடத்தலுக்குமேயன்றி,—நேர் இழையார் சொல் கைக்கும் ஆறும் தமியேனுக்கு என்று துணை செய்வை ஏ-நேர்ந்த ஆபரணத்தைத்தரித்த மடந்தையர்சொல்லும் (இனியவசனங்களெல்லாம்) கசக்குந்தன்மையையும் அடியேனுக்கு எப்போது அனுக்கிரகிப்பையோ? அறியேன். எ - று. வழுவாது என்பது கடைக்குறையாயிற்று. (௪௧)

செய்க்குத்தனங்கமலமலர்சீர்தருஞ்செய்யதிரு
மெய்க்குத்தனங்கடரவடுவாங்கிதொல்வெற்பிடத்திற்
கைக்குத்தனங்கவொழியினுந்தாடனைக்காய்வதிலேன்
வைக்குத்தனங்களழித்திறையாதிந்தவையகமே.

(இ-ள்.) இந்த வையகம் வைக்கு தனங்கள் அழித்து இறையாது - இவ்வுலகிலுள்ளோர் (ஈட்டுங்கால் விளையும்) இகழ்ச்சிக்கு அஞ்சித் திரவியங்களை வீணேயழித்துச் செலவிடார். அதுபோல,—செய்ய திரு மெய்க்கு தனங்கள் தர வடு வாங்கி - சிவந்ததிருமேனிக்கு (உமாதேவியினுடைய) தனங்கள்கொடுக்கத் தழும்பைஏற்றுத் தரித்தவராகிய சிவபெருமானது,— செய்க்கு தன் அம் கமலமலர் சீர் தரும் தொல்வெற்பு இடத்தில் - கழனிக்கு அதனிடத்திற் றோன்றிய அழகிய தாமரைப்பூக்கள் அலங்காரத்தைச் செய்கின்ற பழமலையினிடத்தே,—கை குத்தல் நங்க ஒழியினும் தாள் தனை காய்வது இலேன் - (பிறர்) கையாற்குத்துதலோடு நகுதலைபுஞ்செய்ய (எனது தேகம்) நழுவவரினும், அக்கடவுளுடைய திருவடிகளை வெறுத்தல்செய்யேன். எ-று. வடுவாங்கி வினைக்குறிப்புப்பெயர். ஒழியினும் என்னும் உம்மை ஒழியாமையைவிளக்கிற்று. வை முதனிலைத்தொழிற்பெயர். வைதலாவது பெருமுயற்சியைநோக்கிப் பேராசையுடையவனெனப் பிறராற்கூறப்படுதல். பொருள் முன்னர் இவ்விகழ்ச்சிபயப்பினும், பின்னர்ப் புகழ்ச்சிபயத்தல்நோக்கி உலகினர் அதனைவெறுக்கார்; அதுபோல, திருவடிகளும் முன்னர்ச் சோதனையால் இடையூற்றைவிளைப்பினும், பின்னர்ப் பேரின்பம் பயத்தல்நோக்கி யான் அவற்றை வெறுத்தல்செய்யேன். என்பது கருத்து. (௩௦)

வைத்துமதிக்குமருங்கிற்கைத்தாயெனமந்தரமத்
துய்த்துமதிக்குமனையின்மையான்மறையோதிமமுன்

னெய்த்துமதிக்குமுடிமிசைக்கங்கையையேற்றினையோ
மெய்த்துமதிக்குமணுகவொண்ணுமுதுவெற்பினனே.

(இ-ள்.) மெய்த்து மதிக்கும் அணுக ஒண்ணு முது வெற்பினனே - உண்மையறிவிற்கும் கிட்டுதற்கரிய பழமலைநாதரே,— முன் மறை ஓதிமம் எய்த்து மதிக்கும் முடிமிசை - முற்காலத்திலே பிரமதேவராகிய அன்னம் (தேடி) இளைத்து (அளவிடப்படாது எனத்) துணிந்த உமது திருமுடியினிடத்தே,— மந்தரம் மத்து உய்த்து மதிக்கும் அனை மதிக்கு மருங்கில் இன்மையால் - மந்தரமலையாகிய மத்தைநாட்டிக்கடையப்பட்ட பாற்கடலாகிய தாய் இளம்பிறைக்குப் பக்கத்திலே இல்லாமையால்,— கங்கையை கைத்தாயென வைத்து ஏற்றினையோ - கங்காதேவியை வளர்க்குந்தாயென்று சொல்லும்படி (அவ்விளம்பிறைக்கருகே) ஏற்றிவைத்தீரோ? உரைப்பீராக. எ-று. வைத்து ஏற்றினையோ என்பது விகுதிபிரித்து மாற்றிப்பொருளுரைக்கப்பட்டது. மெய்த்து மெய்ம்மையது. (ருக)

வெற்புக்குமையவடிவேலெறிந்தசெவ்வேண்மதவேள்
பொற்புக்குமையவனோடரன்வாழ்முதுபூதரத்தி
னிற்புக்குமையவளொத்திருந்தாள்குறைவின்றிவளர்,
கற்புக்குமையவள்போலுநுங்காதற்கருங்கண்ணியே.

(இ-ள்.) வெற்பு குமைய வடிவேல் எறிந்த செவ்வேள் - கிரவுஞ்சமலை தூளாக அழியும்படி வடித்த வேலாயுதத்தைப் பிரயோகித்த செவ்வேளென்னுந் திருநாமத்தையுடையவரும்—மதவேள் பொற்பு உக்கும் ஐயவனோடு - மன்மதனுடைய அழகைக்கெடுக்கும் அழகையுடையவருமாகிய முருகக்கடவுளோடு— அரன் வாழ் முதுபூதரத்தின் - சிவபெருமான் வாழ்கின்ற பழமலையினிடத்திலே,— குறைவு இ

ன்றி வளர் கற்புக்கு உமையவள் போலும் நம் காதல் கரும் கண்ணி- குறைவில்லாது ஓங்கிவளரும் கற்பினுக்குப் பார்வதியை நிகர்க்கும் உம்முடைய ஆசையைவிளைக்கும் கரியகண்களையுடையவள்,—இல் புக்கு உமை அவள் ஒத்து இருந்தாள் - இல்லொழுக்கத்திற் பிரவேசித்து உமக்கு அவள் இசைந்திருந்தாள். எ-று. [பாங்கி தலைவியினது நன்மனைவாழ்க்கைத் தன்மையுரைத்தல்.] உமை வேற்றுமைமயக்கம்.

கருந்தடங்கட் குமுதவாய் மயிலெங்கள்கண் களுக்கு
விருந்தடங்கட் குலமெனப்போந்தவிண்மீன் பொரியு
மருந்தடங்கட் குவளையேடையாகுகவம்புயங்கள்
பெருந்தடங்கட் குமுகமாகுங்குன்றைப்பெருந்தகையே.

(இ-ள்.) அம்புயங்கள் பெரும் தடங்கட்கு முகமாகும் குன்றை பெருந்தகையே - செந்தாமரைமலர்கள் பெரியவாவிகளுக்கு வதனம் போலத்தோன்றும் பழமலைநாதரே,—கரும் தடம் கண் குமுதம் வாய் மயில் எங்கள் கண்களுக்கு விருந்தள் - கரிய விசாலமானவிழிகளையும் செவ்வாம்பலையொத்த வாயையும்வாய்ந்த மயில்போலும் சாயலையுடையவளும் எங்களுடைய நேத்திரங்களுக்கு விருந்தாய் அதிசயம் விளைப்பவளுமாகிய தலைவியானவள்— தங்கட்கு நலம் என போந்த விண் மீன் பொரியும் அரும் தடம் - தங்கள்குலத்திற்கு வழுவல்லவென்று தலையரோடு சென்ற (வெப்பத்தால்) ஆகாயத்திலுள்ள உடுக்குலங்களும் பொரிந்து உதிருகின்ற அரிய (பாலைநிலத்து) வழியானது,— கள் குவளை ஓடை ஆகுக - தேனைப்பொழியும் நீலோற்பலமலர்ந்த மடுவைப்போலக் (குளிர்ச்சி) ஆகக்கடவது. எ-று. [உடன்போக்கில் நற்றாய் சுரந்தணிவித்தல்.] போந்ததடம் என இயையும். (௫௩)

பெருமுதலைவளையான்போற்றுங்குன்றைப்பெருந்தகையை
யிருமுதலைவளைமூப்படைந்தாண்டவற்கின்மகவைக்

கருமுதலைவளைவாயிற்றந்தானைமுன்கண்டழுது
பொருமுதலைவளைநீத்தனண்மேவினள்பூங்கொடியே.

(இ-ள்.) பூங்கொடி - மலர்க்கொடிபோலும் என்னுடைய பெண்ணானவள்,— பெரு முதலை - (யாவர்க்கும்) பெரிய முதற்கடவுளும் - வளையான் போற்றும் குன்றை பெரும் தகையை-சங்கையுடைய திருமாலானவர் வணங்கும் முதுகுன்றத்திலேவாழும் பெரிய தயாநிதியும்—இருமுதலை வளை மூப்பு அடைந்து ஆண்டவற்கு - இருமல் மேலிட்டுத் தலையும்வளைகின்ற விருத்தபருவத்தையடைந்து ஆளப்பட்டவராகிய சுந்தரமூர்த்திநாயனார்பொருட்டு—இல் மகவை கருமுதலை வளை வாயில் தந்தானை முன் கண்டு அழுது-(அவிநாசியிலே ஓர்வேதியனது) இறந்துபோன புதல்வனைக் கரிய முதலையினது குகைபோலும் வாயினின்றும் அழைத்துக்கொடுத்தவருமாகிய சிவபெருமானை எதிரேகண்டு விரகத்தாலழுது,— பொருமுதலை மேவினள் வளை நீத்தனள் - தேம்புதலையுமடைந்தாள்; வளையலையும் துறந்தாள்: (யான் யாது செய்வேன்.) எ-று. [நற்றாயிரங்கல்.] (கூ)

பூங்குமிழும்படிமுள்ளும்பொருந்திப்புளிஞர்பொருள்
வாங்குமிழும்படிமோதுமெனல்கொடுமால்விழுங்கி
யாங்குமிழும்படிவந்தவெம்பாலையடைந்தவள்கால்
வேங்குமிழும்படினென்னும்பழமலைவித்தகனே.

(இ-ள்.) பழமலை வித்தகனே - பழமலையில்வீற்றிருக்கும் ஞானசொரூபரே,— பூ குமிழும் படி முள்ளும் பொருந்தி - பூவையுடைய குமிழஞ்செடியும் படிந்தமுட்களுஞ் சேர்ந்து—புளிஞர் பொருள் வாங்கும் இழும்படி மோதும் எனல் கொடு - வேடர்களால் பொருள் ப

றிக்கப்படும் (அன்றியும்) வழுக்கிவிழும்படி (அவரால்) மோதவும்படும் என்பதை மனதிலேசிந்தித்து—மால் விழுங்கி ஆங்கு உமிழும் படி வந்த வெம்பாலை அடைந்தவள் - விஷ்ணுவானவர் விழுங்கி அப்பொழுதே உமிழ்ந்துவிட்ட பூமியோடுவந்த கொடிய பாலைநிலத்தில் சென்றவளாகிய நம்புதல்வியினது,—கால் வேம் குமிழும் படின் என்னும் - கால்கள் வெந்துபோம்; (அத்துடனே) கொப்புளமும் பொருந்தில் யாதாய் முடியும். எ-று. [நற்றாய் தலைவிமென்மைத் தன்மைக்கிரங்கல்.] வாங்கும் மோதும் என்பவற்றில் செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும் படுவிகுதிகள் தொக்கன. இழுக்கும் என்பது இழும் என நின்றது. உமிழும் காலமயக்கம். திருமாலும் இப்பாலையினது கொடுமைநோக்கியே உமிழ்ந்தனரென்பது கருத்து. (ருடு)

வித்துருமத்தைநிகர்வானுயிர்செய்வினையருத்துங்
கத்துருமத்தையிடுதயிர்போலக்கலக்குமதன்
சத்துருமத்தைவனைமுதுகுன்றிறைதாள்கொடுவா
னத்துருமத்தையிலவாகவெள்ளுவர்நற்றவரே.

(இ-ள்.) நற்றவர் - நல்லதவத்தையுடைய மெய்ஞ்ஞானிகள்,—வித்துருமத்தை நிகர்வான் - பவளம்போலும் திருமேனியையுடையவரும்—உயிர் செய் வினை அருத்தும் கத்துரு - ஆன்மாக்களீட்டிய வினைப்பயன்களை நுகர்விக்கும் கர்த்துருத்துவமுடையவரும்—மத்தை இடு தயிர் போல கலக்கும் மதன் சத்துரு-மத்தையிட்டுக்கடைந்த தயிரைப்போல (உலகங்களையெல்லாம்) கலங்கச்செய்கின்ற மன்மதனுடைய பகைவரும்—மத்தை வனை முதுகுன்று இறை தாள் கொடு - ஊமத்தம்பூவைச்சூடிய பழமலைநாதருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் (பொருளாகக்) கொண்டு,—வானம் துரும

த்தை இல ஆக எள்ளுவர் -விண்ணுலகத்திலுள்ள கற்பகச்சோலைவாழ்வையும் நிலையல்லனவென்று இகழ்ந்துதள்ளுவார்கள். எ-று. (ருசு)

நற்றவராகமறையவராகவிந்நானிலத்தி
லற்றவராகமனமுடையார்க்கன்றியச்சமற
வுற்றவராகமறியாதொளித்தநின்னொண்பதங்கள்
பற்றவராகமலாலயன்போற்றும்பழமலையே.

(இ-ள்.) கமலாலயன் போற்றும் பழமலையே - தாமரையாசனத்தையுடைய பிரமதேவர்வணங்கும் பழமலைநாதரே,—அச்சம் அற உற்றவர் ஆகம் அறியாது ஒளித்த நின் ஒண் பதங்கள் - பயமில்லாமற் (பாவங்களை) இயற்றும் மூடர்களுடைய சரீரத்திலிருந்தும் (அவர்களுக்குத்) தோன்றாமல் ஒளித்திருந்த உம்முடைய ஒள்ளிய பாதங்களானவை,— இந் நால் நிலத்தில் அராகம் அற்ற மனம் உடையார்க்கு அன்றி - இந்த நால்வகைப்பட்ட நிலங்களையுடைய உலகத்திலே மூவித ஏடணைகளையும் ஒழித்த மனத்தையுடைய ஞானிகளுக்கேயல்லாமல்,—நல் தவர் ஆக மறையவர் ஆக பற்ற அரா-(அவற்றை ஒழிக்காதவர்கள்) நல்லதவத்தையுடையவராயிருப்பினும் வேதியர்குலத்தையுடையவராயிருப்பினும் கிட்டுதற்கரியனவாம். எ-று. நால்வகைநிலம்-குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். மூவிதவேடணை புத்திரேடணை, தாரேடணை, அருத்தேடணை. (ருஎ)

பழங்கவிகடமர்திக்கிமொழிற்பண்ணைட்மறை
முழங்கவிகடவுளர்க்கியுங்குன்றைமுதல்வனைவே
ளழங்கவிகடவிழிதிறந்தானையடிபரவார்
கிழங்கவிகடமறவரிற்றேன்றிக்கெடுவர்களே.

(இ-ள்.) கவிகள் பழம் தம் மக மந்திக்கு ஈ பொழில் - ஆண் குரங்குகள் கனிகளைப்பறித்துத் தம்முடைய குட்டிகளுக்கும் பெண் குரங்குகளுக்கும் கொடுக்கும் சோலைகளிலே—பண்டை மறை முழங்க அவி கடவுளர்க்கு ஈயும் குன்றை முதல்வனை - பழமையாகிய வேதமந்திரங்கள் முழங்கும்படி அவிற்பாகத்தைத் தேவர்களுக்குக் கொடுக்கும் திருமுதுகுன்றத்தில் வீற்றிருக்கும் முதற்கடவுளும்—வேள் அழங்க விகடம் விழி திறந்தானை அடி பரவார் - மன்மதனழியும்படி மாறுபட்ட நெற்றிக்கண்ணைத்திறந்தவருமாகிய சிவபெருமானுடைய திருவடிகளை வழிபடாதபாவிகள்,—கடம் கிழங்கு அவி மறவர் இல் தோன்றி கெடுவர்கள் - காட்டிலே கிழங்குமுதலிய பொருள்களை அவித்துத்தின்றுழலும் வேடர்குடியிற்பிறந்து (மேலுமேலும் பாவங்களைப் புரிந்து) அழிவார்கள். எ-று. முழங்க என்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற் றொக்கது. மாறுபடுதலாவது ஏனை நேத்திரங்கள்போலாது மேனோக்கிநிற்றல். ஐ ஆரும்வேற்றுமைப் பொருள்பட நின்றது. (௫அ)

கெடுத்துப்பணியுமுடையும்வெள்காமற்கிழத்திமுலை
வடுத்துப்பணியுமுரம்வேட்டுநின்றனள்வல்லியத
ளுடுத்துப்பணியுமரைக்கசைத்தோய்தொண்டருள்ளமெல்லாங்
கொடுத்துப்பணியுமலர்த்தாட்டிருமுதுகுன்றத்தனே.

(இ-ள்.) அரைக்கு அதள் உடுத்து பணியும் அசைத்தோய் - இடைக்குப் புலித்தோலை ஆடையாகத் தரித்து (அதன்மேற்கச்சாக) நாகத்தையுங் கட்டினவரே,—தொண்டர் உள்ளம் எல்லாம் கொடுத்து பணியும் மலர் தாள் திருமுதுகுன்றத்தனே - அடியார்கள் சிந்தனையெல்லாம் ஒப்புவித்து வணங்குகின்ற தாமரைமலர்போலுந் திரு

வடிகளையுடைய பழமலைநாதரோ,—வல்லி - கொடிபோலும் எனது பெண்ணானவள்,—பணியும் உடையும் கெடுத்து - ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் போக்கிவிட்டு,—கிழத்தி முலை வடு அணியும் துப்பு உரம் வேட்டு வெள்கரமல் நின்றனள்-உமாதேவியினது முலைத்தழும் பையணிந்திருக்கும் (உம்முடைய) பவளம்போலும் மார்பையிச்சி த்து நாணமின்றி நின்றாள். எ-று. [நற்றாயிரங்கல்.] (ருக)

குன்றுகளுங்களையொவ்வாவெனுமுலைக்குன்றதிர்க்குஞ்
சென்றுகளுங்களையுண்வண்டுமோவில்செழுங்கொன்றைமான்
கன்றுகளுங்களை நன்மதிவேணிக்கடவுடனை
யென்றுகளுங்களையெம்மானைக்குன்றையிறைவனையே.

(இ-ள்.) குன்றுகள்-மலைகளே,—முலை குன்று (இத்தலைவியினுடைய) தனங்களாகியமலைகள்,—களும் களை உண் வண்டும் ஓவு இல் செழும் கொன்றை-தேனும் அத்தேனையருந்தும்வண்டும் நீக்கமில்லாத செழித்த கொன்றைமாலையையும்,—மான் கன்று உகளும் கலை நல் மதி வேணி கடவுள்தனை - மான்கன்றானது துள்ளிப்பாய்கின்ற கலைகளையுடைய நல்ல இளம்பிறையையுந்தரித்த சடைமுடியையுடைய கடவுளும்—என் துகளும் களை எம்மானை குன்றை இறைவனை சென்று - என்னுடைய குற்றத்தையும் நிவர்த்திக்கும் எமது தலைவருமாகிய பழமலைநாதரை அணைந்து,—உங்களை ஒவ்வா எனும் அதிர்க்கும்,- உம்மை (தமக்கு) நிகரற்றனவென்று சொல்லுகின்றன; அன்றியும், ஆரவாரிக்கின்றன. எ-று. [பாங்கி தலைவியினது தனப்பூரிப்பைக்கண்டு குன்றொடு வியந்துகூறல்.] களும் களை இடைக்குறைந்தன. களை லளா ஒற்றுமை. (சூ௦)

இறவாதவாநந்தவெள்ளத்தழுத்தியெனையருளாற்
றுறவாதவாநந்தவாள்வதென்றேமெய்த்துறவர்தொழு

மறவாதவாநந்தனஞ்சூழ்முதுகுன்றடைந்தவர்த
முறவாதவாநந்தகோபாலனென்றற்குடையவனே.

(இ-ள்.) மெய் துறவர் தொழும் அறவா-உண்மையாகிய துறவிகள் வணங்கும் தருமசொருபியே,—தவா நந்தனம் சூழ் முதுகுன்று அடைந்தவர்தம் உறவா-அழிவில்லாத நந்தனவனங்கள் சூழப்பெற்ற திருமுதுகுன்றத்தையடைந்தவர்களுக்கு உறவாயிருப்பவரே,—நந்தகோபாலன் தவா என்றற்கு உடையவனே - நந்தகோபாலராகிய விஷ்ணுவானவர் கணவரேயென்று துதித்தற்கு (அவளை மனைவியாக) உடையவரே,—எனை துறவாது அருளால் இறவாத ஆநந்த வெள்ளத்து அழுத்தி - அடியேனை (அபக்குவியென்று) தள்ளாது கிருபையினால், அழிவில்லாத ஆனந்தவெள்ளத்தின்கண்ணே மூழ்குவித்து,—அவா நந்த ஆள்வது என்றோ-ஆசைகெடும்படி ஆளுநாள் எந்நாளோ? அறியேன். எ-று. (சுக)

உடையமடங்கலுதைத்தபொற்பாதவொளிசெய்மழுப்
படையமடங்கன்முகர்காய்ந்தவீரபழமலையாய்
கடையமடங்கல்லொடுபகலுந்தொழக்கற்றிலமெம்
விடையமடங்கல்வருவதெஞ்ஞான்றுவிளம்புகவே.

(இ-ள்.) மடங்கல் உடைய உதைத்த பொன் பாத-இயமனது (மார்பு) பிளக்க உதைத்தருளிய அழகிய திருவடிகளையுடையவரே,—ஒளி செய் மழு படைய-காந்தியைப்பரப்பும் மழுவாயுதத்தையுடையவரே,—மடங்கல் முகன் காய்ந்த வீர—விஷ்ணுவாகிய நரசிங்கத்தையழித்த வீரபத்திரரே,— பழமலையாய் - திருமுதுகுன்றத்தையுடையவரே,—கடையம் மடங்கு அல்லொடு பகலும் தொழ கற்றிலம் - கடையேமாகியயாம் மாறிமாறி வருகின்ற இரவும்பகலும்

(உம்மை) வணங்கக் கற்றேமில்லை;—எம் விடையம் அடங்கல் வருவது எஞ்ஞான்று விளம்புக - (இப்படிப்பட்ட) எம்முடைய விடயங்களெந்தும் அடங்குதலோடு (மனோலயம்)வருவது எந்நாள் கட்டளையிடுவீராக. எ-று. (௬௨)

விளங்கவலம்புரிமால்போற்றுநன்முதுவெற்பகஞ்சேர்ந்
துளங்கவலம்புரியாய்மாய்பிறிதொருடம்படையாய்
துளங்கவலம்புரிமென்குழன்மாதர்க்குச்சூழ்ந்துநின்று
களங்கவலம்புரியிவ்வெற்பையேநிலைகைவருமே.

(இ-ள்.) துளங்க வலம்புரி மென் குழல் மாதர்க்கு - ஒளிவிடும்படி வலம்புரிவடிவாகச் செய்யப்பட்ட தலைக்கோலத்தையணிந்த மெல்லிய கூந்தலையுடைய மடந்தையர்பொருட்டு—சூழ்ந்து நின்று களங்க அலம் புரி உள் - கவிந்துநின்று குற்றம்பொருந்திய துன்பத்திற்கேதுவாகிய செயல்களைச் செய்கின்ற என் மனமே,—விளங்க வலம்புரி மால் போற்றும் நல் முதுவெற்பு அகம் சேர்ந்து - விளங்கும்படி வலம்புரிச்சங்கையேந்தும் திருமாலானவர் வழிபடுகின்ற நல்ல பழமலையினிடத்தே அடைந்து,— இவ் வெற்பையே அங்கம் வலம் புரியாய் - இம்மலையையே அங்கப் பிரதக்ஷிணம் செய்வாயாக; (செய்யில்,)—மாய் பிறிது ஒரு உடம்பு அடையாய்-அழியுந்தன்மையதாகிய வேறொருசரீரத்தை அடையமாட்டாய்;—நிலை கைவரும் - (அன்றியும்,) முத்தியாகிய நிலைபேறும் கைகூடும். எ-று. இரண்டாமடியின் முதலிலிருக்கும் உள் என்பது நான்காமடியிலுள்ள புரி என்பதனோடு கூட்டப்பட்டது. உள் அம்முச்சாரியை பெறுதுநின்றது. (௬௩)

வருந்தாதவாவளைத்திட்டவப்வவன்பிணிக்கு
மருந்தாதவாமருவும்பழமலைவாணவுனைப்

பொருந்ாதவரையுயிர்செகுத்துண்ணம்புலிமழுங்கத்
திருந்தாதவராவரக்கூவுறாததென்சேவல்களே.

(இ-ள்.) வருந்தாத வரை வளைத்திட்டவ - யாதொரு வருத்தமுமடையாத மேருமலையை வில்லாகவளைத்தவரே,—பவம் வன் பிணிக்கு மருந்தா - பிறவியாகிய வலிய நோயைத் தணித்தற்கு ஔடதமானவரே,—தவரை மருவும் பழமலை வாண - தவஞ்செய்வாரைப்பொருந்திய முதுகிரியின்கண் வாழ்பவரே,—உனை பொருந்தாதவரை உயிர் செகுத்து உண் அம்புலி மழுங்க - தேவரீரைக் கூடியணையாதபெண்களை உயிரைக்கொன்றருந்தும் சந்திரனொளிகெடும்படி,—சேவல்கள் திருந்து ஆதவரை வர கூவுறாதது என் - (விடியற்காலமாகியும்) ஆண்கோழிகள் அழகுமிகுந்த சூரியனை வரும்படி அழையாதிருப்பதென்னையோ?. எ-று. [இரவுநீட்டிப்பத் தலைவி வருந்தியியம்பல்.] (சுச)

சேவாலங்காட்டுபொழுதகஞ்சாயச்செலுத்திவரி
மாவாலங்காட்டுமுதுகிரிவாணவவ்வானமுய்ய
வேவாலங்காட்டுமிடற்றாய்நின்சீர்த்திவிரித்துரையா
நாவாலங்காட்டுவிலங்காயினேனிந்நானிலத்தே.

(இ-ள்.) சே ஆலம் காட்டு பொழுது அகம் சாய-(ஆயர்) எருதுகளைத் தண்ணீர்குடிப்பிக்கும் வேளையிலே அவற்றின்மனம் சோர்வடையும்படி—அங்கு வரிமா வால் செலுத்தி ஆட்டும் முதுகிரி வாண - அவ்விடத்திலே புலியானது வாலைநீட்டியசைக்கின்ற பழமலையில் வாழ்பவரே,—அவ் வானம் உய்யவே ஆலம் காட்டும் மிடற்றாய் - அத்தேவர்கள் பிழைக்கும்பொருட்டே விடத்தையுண்டு (அடையாளமாகக்)காட்டும் கண்டத்தையுடையவரே,—இந்த நால் நிலத்தே நின் சீர்த்தி விரித்து உரையா நாவால் - இந்த நால்வகைப்பட்

ட நிலங்களைவாய்ந்த உலகத்திலே தேவரீருடைய பெருங்கீர்த்தியை (யாவருமறிய) விரித்துரையாத நாவைப்படைத்திருத்தலால்,—அம் காட்டு விலங்கு ஆயினேன்-அழகிய காட்டிற்றிரியும் மிருகமென்று (பெரியோரிகழும்படி) ஆயினேன். எ-று. வானம் ஆகுபெயர்.(௫௫)

நிலங்கடந்தானைமகிழ்வானைத்தன்னடிநின்றொடுங்கும்
புலங்கடந்தானைமுதுகுன்றவாணனைப்போற்றிலர்தந்
நலங்கடந்தானைமுழுதுமிழந்தந்நகரினிற்போ
யிலங்கடந்தானைதுணிசீரையாக்கொண்டிரப்பர்களே.

(இ-ள்.) நிலம் கடந்தானை மகிழ்வானை - உலகையளந்த முகுந்தனை மகிழ்ந்துகாத்தவரும்—தன் அடி நின்று ஒடுங்கும் புலங்கள் தந்தானை - (அடியேனுக்குத்) தம்முடைய திருவடிகளிலே நிலைபெற்றொடுங்கும் ஐம்புலவுணர்ச்சியை அளித்தவருமாகிய—முதுகுன்ற வாணனை போற்றிலர் - பழமலைநாதரை வணங்காதவர்கள்,—தம் நலங்கள் தம் தானை முழுதும் இழந்து அந்நகரினில் போய் - தமது செல்வங்களையும் தமதுசேனைகளையும் முற்றும்பறிகொடுத்து அத்தலத்தினிற்சென்று,—தந்தால் கை துணி சீரையா கொண்டு இலங்கள் இரப்பர்கள் - நூலினாற் றைக்கப்படும் கந்தைத்துணிகளை ஆடைகளாக உடுத்துக்கொண்டு வீடுகடோறும் (கூழ்முதலியவுணவை) இரந்துதிரிவர்கள். எ-று. (௫௬)

இரப்பாரிலாரையிலரெனின்வைவரிரந்திடிற்றுங்
கரப்பாரிலாரழகநோக்குமூர்மழுக்கைக்குன்றையா
யுரப்பாரிலாரையுறவர்க்கொள்வர்தம்முள்ளனபோய்
நிரப்பாரிலாரைவிப்பார்தம்மக்களைநீத்திருந்தே.

(இ-ள்.) மழு கை குன்றையாய்- மழுவையேந்திய கரத்தையுடைய பழமலைநாதரே,— இலாரை இரப்பார் இலர் எனின் வைவர்

இரங்கிடில் தாம் கரப்பார் இலாரை முகம் நோக்குறர்-இல்லறமுடை யாரைச்சேர்ந்து யாசிப்பார். (யாங்களும்) இல்லாதவர்களேயென்று அவர்சொன்னால் இகழ்வர். (தங்களிடத்திலொருவர்வந்து) யாசிக்கில் தாம் மறைவார். வறியர்முகத்தைப்பாரார். இங்ஙனமாகியபாவிகள்,—தம் உள்ளன போய் - தமக்குள்ளனவாகிய செல்வங்களையிழந்து,— நிரப்பு ஆரில் தம் மக்களை நீத்து இருந்து ஆரை அவிப்பார் - வறுமை மேலுமேலுமுதிர்ந்தால் தங்களுடையமக்களையுமிழந்து, (தனித்திருந்து) ஆரைக்கீரையை அவித்துண்பார்கள்;—உரம்பாரில் ஆரை உறவு ஆக கொள்வர் - வலிய இவ்வுலகத்திலே (இவர்கள்) எவர்களை உறவாகக் கைக்கொள்வார்கள். எ-று. இல்லாரை என்பன இடைக்குறைந்தன. இலாரைமுகம் என்பது விகுதிபிரித்துக் கூட்டப்பட்டது. (சுஎ)

இருப்புவலியையகன்றுபொன்வல்லியையெண்ணுதலாம்
விருப்புவலியைமுலையாரணங்கினர்விண்ணுறுதல்
பொருப்புவலியையிடத்தில்வைத்தாய்மலர்ப்பூங்கணைசேர்
கருப்புவலியையொழித்தாய்பழமலைக்கண்ணுதலே.

(இ-ள்.) பொருப்பு வலியை இடத்தில் வைத்தாய்- மலைமகளை இடதுபாகத்தில் வைத்தருளினவரே,—மலர் பூ கணை சேர் கருப்பு வலியை ஒழித்தாய் - (மன்மதனுடைய) மலர்க்கணைநெருங்கிய கரும்புவில்லினது வன்மையைக் கெடுத்தவரே,— பழமலை கண்ணுதலே - முதுகிரியில்வீற்றிருக்கும் நெற்றிக்கண்ணையுடையவரே,— விருப்பு வல் இயை முலையார் அணங்கினர் விண் உறுதல் - ஆசையை விளைக்கும் சூதாடுகருவியைநிகர்த்த தனங்களையுடைய இவ்வுலகமடந்தையரது (இன்பத்தைவெறுத்து) தெய்வமகளிரது (இன்பத்தைவிரும்பி) விண்ணுலகத்தை யடைதல்,—இருப்பு வலியை அகன்

று பொன் வல்லியை எண்ணுதல் ஆம் - இருப்புவிலங்கை வெறுத்துப் பொன்விலங்கை விரும்புதல்போலும். எ-று. வல்லி என்பன இடைக்குறைந்தன. மலர்ப்பூ இருபெயரொட்டு. யாவருக்கும் வீடு பேற்றினன்றி இம்மைமறுமைகளிலே இன்பமில்லையென்பது கருத்து. (சூஅ)

கண்டந்தரிக்கும்விடத்தார்பழமலைக்கண்ணுதலார்
பண்டந்தரிக்குமருங்களித்தார்தம்பழவடியா
ரெண்டந்தரிக்குமரிதாகும்பாதரிருங்கருமா
வெண்டந்தரிக்குமதற்காய்ந்தவரெனுமெல்லியலே.

(இ-ள்.) மெல் இயல் - மிருதுவான இயற்கையையுடையதலைவியானவள்,—கண்டம் தரிக்கும் விடத்தார் - கழுத்திலேதரித்த விஷத்தையுடையவர்,—பழமலை கண்ணுதலார் - பழமலையில்வாழும் நெற்றிக்கண்ணினர்,—பண்டு அந்தரிக்கு மருங்கு அளித்தார் - முற்காலத்திலே உமாதேவிக்கு இடப்பாகத்தைத்தந்தவர்,— தம் பழவடியார் எண் தந்து அரிக்கும் அரிது ஆகும் பாதர் - தமது பழமையான அடியவர்களுடைய கருத்தைமுடித்து விஷ்ணுமூர்த்திக்கும் அறிதற்கரிதாக விளங்கும் திருவடிகளையுடையவர்,—இரு கருமா வெண் தந்தர்-பெரிய பன்றியினது வெளுத்த கொம்பையணிந்தவர்,—இக்கு மதன் காய்ந்தவர் எனும் - கருப்புவில்லையுடைய மன்மதனை யெரித்தவர், என்று சிவநாமங்களையே சிந்தித்திருக்கின்றனள். எ-று. [தோழி, தலைவிவருந்திய தன்மையுரைத்தல்.](சூகூ)

மெல்லவணங்குநினைவாலெதிர்ந்திடவேனெடுங்க
ணல்லவணங்குவளையுடையோடுநடந்திலைநீ
கொல்லவணங்குமதிசுமந்தேகின்றகொள்கையென்னோ
வெல்லவணங்குமலையாய்முதுகிரிவேதியனே.

(இ-ள்.) வெல்ல வணங்கும் மலையாய் - முப்புரத்தைவெல்லுதற்கு வில்லாகவளைந்துநிற்கும் மேருமலையையுடையவரே,—முதுகிரி வேதியனே - பழமலையில்வாழும் அந்தணரே,—வேல் நெடும் கண் நல்ல அணங்கு - வேலைநிகர்த்த நெடியகண்களையுடைய நல்ல தெய்வப்பெண்போலும் என்மகள்,—வணங்கும் நினைவால் மெல்ல எதிர்ந்திட - (உம்மை) வணங்கும் சிந்தனையோடு மெல்ல முன்னேவர;—நீ வளை உடையோடு நடந்திலை - தேவரீர் (அவளுடைய)வளையல்களும் வஸ்திரமுமாகிய இவற்றோடுசென்றீரில்லை:—கொல்ல அணங்கும் மதி சுமந்தே நின்ற கொள்கை என்னோ - கொல்லும்படிவருத்துகின்ற இளஞ்சந்திரனையும் தாங்கிக்கொண்டே நிற்கின்ற தன்மையாதோ? அறியேன். எ-று. [நற்றுயிரங்கல்.] (எ௦)

வேதியவாவிதனக்காவியாகியவித்தகபெண்
பாதியவாவிமலர்த்தேன்பெருகும்பழமலைவாழ்
சோதியவாவிவருவிடைப்பாகநின்றொண்டருறு
நீதியவாவியவனையென்றேசென்றுநேர்குவனே.

(இ-ள்.) வேதிய - அந்தணரே,—ஆவி தனக்கு ஆவி - ஆகிய வித்தக - உயிர்க்குயிராகி விளங்குகின்ற ஞானசொருபரே,—பெண் பாதிய - அம்பிகையை அர்த்தபாகத்தில் உள்ளவரே,—வாவி மலர் தேன் பெருகும் பழமலை வாழ் சோதிய - தடாகங்களிலே பூக்களிலுள்ளதேன் பெருகிநிற்கும் திருமுதுகுன்றத்தில் வாழ்கின்ற சோதிசொருபரே,—வாவி வரு விடை பாக - தாவிச்செல்லும் இடபத்தை நடாத்துபவரே,—நின் தொண்டர் உறும் நீதி அவாவி அவனை என்று சென்று நேர்குவனோ-உம்முடைய அடியவர்கள் கைக்கொண்ட ஒழுக்கங்களையவாவி அவனை எக்காலமடைந்து உய்ந்து வாழ்வனோ? எ-று. (எக)

நேருமடியர்தமக்குறவாயவர்நேசமறச்
சோருமடியர்தமையணுகாதவர்தும்பியினாற்
சாருமடியர்மணிநிறவண்ணன்றரையிடந்து
தேருமடியர்முதுகுன்றவாணுதற்றீக்கண்ணரே.

(இ-ள்.) தும்பியினால் சாரும் மடியர் - யானையினாற்கிடைத்த வஸ்திரத்தையுடையவரும் - நிறம் மணி வண்ணன் தரை இடந்து தேரும் அடியர் - காந்திபெற்ற நீலமணிபோலும் நிறத்தையுடைய திருமாலானவர் பூமியைப்பிளந்து தேடாநின்ற திருவடிகளையுடையவரும்—முதுகுன்றம் வாள் நுதல் தீ கண்ணர் - திருமுதுகுன்றத்திலேவீற்றிருக்கும் காந்திபெற்ற நெற்றியிலே அக்கினிக்கண்ணையுடையவருமாகிய சிவபெருமான்,—நேரும் அடியர் தமக்கு உறவு ஆயவர்-அன்போடடைந்த அடியவர்களுக்குஉறவாகியிருப்பவர்;—நேசம் அற சோரும் மடியர்தமை அணுகாதவர் - அன்புநீங்கச் சோர்ந்துதிரியும் சோம்பலையுடையவர்களைச் சேராதவர். எ-று. (எஉ)

கண்டீரவந்தனைநேர்ந்தாங்கருகக்களிற்றினைமுன்
கொண்டீரவந்தனைவானோர்செயுமுதுகுன்றனொடு
வண்டீரவந்தனைநேர்வாளைக்கோலம்மதனனெய்யும்
புண்டீரவந்தனைசேர்தியென்றோதுமின்போமின்களே.

(இ-ள்.) வண்டீர் - வண்டுகளே,—முன் கண்டீரவந்தனை நேர்ந்து ஆங்கு அருக களிற்றினை கொண்டு ஈர - முற்காலத்திலே சிங்கத்தை யெதிர்ந்தாற்போல அழிவையடையும்படி யானையைக் கையிற்பிடித்து அதனது தோலையுரிக்க—வானோர் வந்தனை செயும் முதுகுன்றனொடு - தேவர்கள் (உய்ந்தோம் உய்ந்தோமென்று) வணங்கும் பழமலைநாதரோடு,—அம்மதனன் எய்யும் கோல் புண் தீர வந்தனை - அந்த மன்மதனானவன் பிரயோகிக்கும் பாணங்களால்

நேரிட்ட புண்கள் நீங்கும்படி (தேவரீர்) வந்து—அவம்தனை நேர்வானை சேர்தி என்று ஓதுமின் - சுகத்தையிழந்துகிடக்கும் எங்களுடைய தலைவியைக் கூடுவீராகவென்று சொல்லுங்கள்;—போமின்கள் - விடைபெற்று விரையச்செல்லுங்கள். எ-று. [வண்டுவிடுதூது.] வந்தனை முற்றெச்சம். வண்டேர் முதுகுன்றனொடு ஓதுமின் போமின் என இயையும். (எ௩)

போதுமின்மாலைவகைவகையாகவம்பொற்றொடியீ
ரோதுமின்மாலைதரின்வம்மினில்லையென்றோட்டினரேன்
மாதுமின்மாலைவருமுனஞ்சாமென்றுவண்கைமலர்
மோதுமின்மாலைமகிழ்குன்றைவாணர்தம்முன்னடைந்தே.

(இ-ள்.) அம் பொன் தொடியீர் - அழகிய பொன்னாலாகிய வளையலையணிந்த பாங்கிகளே,—வகை வகை ஆக மாலை போதுமின் - வகுப்புவகுப்பாக ஒழுங்குபடச் செல்லுவீராக;—மாலை மகிழ் குன்றைவாணர்தம் முன் அடைந்து ஓதுமின் - விஷ்ணுவை மகிழ்ந்தடிமைகொண்ட பழமலைநாதருக் கெதிரேசென்று (யான் விரகத்தாற்படும்பாட்டைச்) சொல்லுவீராக;—மாலை தரின் வம்மின் - அவர் கொன்றைமாலையைத்தந்தால் வாங்கிவருவீராக;—இல்லை என்று ஓட்டினரேல் - கொடுப்பதில்லையென்று (உங்களைத்) துரத்துவாராயின்,—மின் மாது மாலை வரும் முனம் சாம் என்று வண் மலர் கை மோதுமின் - மின்னற்கொடிபோலுந் தலைவியானவள் மாலைக்காலம் வருதற்குமுன்னமே சாவாளென்றுசொல்லி வளப்பம் பொருந்திய மலர்போலுங்கைகளால் (முகத்திலே) அறைந்துகொள்ளுவீராக. எ-று. கைமோதல் கைகளை ஒன்றோடொன்று தாக்கல் எனினும் அமையும். [தலைவி மாலைவிருப்புரைத்து விடுத்தல்.] (எ௪)

முன்னஞ்சிலம்புசிலையாக்கியநன்முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்புசிலம்புதலோடையிற்பூஞ்சிறக
ரன்னஞ்சிலம்புநடையிளமானையனங்கனெய்து
தன்னஞ்சிலம்புகுவளையல்லாதுதணந்தனனே.

(இ-ள்.) முன்னம் சிலம்பு சிலை ஆக்கிய நல் முதுகிரியாய்-முற்காலத்திலே மேருமலையை வில்லாகவளைத்த நல்ல பழமலைநாதரே,—பொன்னம் சிலம்பு ஓடையில் பூம் சிறகர் அன்னம் சிலம்புதல் சிலம்பும் நடை இள மானை - பொற்சிலம்புகள் மடுக்களிலுள்ள பொலிவுபெற்ற இறகுகள்வாய்ந்த அன்னங்களொலித்தலைப்போல ஒலிக்கும்படி நடக்கின்ற இளமைதங்கிய மான்போலும் எனதுபெண்மேல்,—அனங்கன் தன் அம்பு அஞ்சில் குவளை அல்லாது எய்து தணந்தனன் - மன்மதனுனவன் தன்னுடைய பாணம் ஐந்தனுள் நீலோற்பலமொழிந்த ஏனை நான்குபாணங்களையும் எய்து இழந்து வறியனுயினுன். எ-று. [நற்றுயிரங்கல்.] எனவே, நீலோற்பலமென்னும் பாணத்தையேவிக் கொல்லுதலொன்றுதவிர ஏனைத் துக்கங்களெல்லாம் விளைத்தனனென்பது கருத்து. பஞ்சபாணங்களின் செயல்களை, "நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ - வனைத்துணவு நீக்கு மசோகு - வனத்திலுறு - முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங் - கொல்லுமத னம்பின் குணம்." என்னும் வெண்பாவானறிக. மானை வேற்றுமைமயக்கம். (எரு)

தணந்தவளக்கரிமேனியளுங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரினின்றமுமோவலலாவுயிர்க
ளுணந்தவுளக்கரிதாமுதுகுன்றரனேங்கமர
கணந்தவளக்கரியானேத்திறையன்றிக்காப்பிலையே.

(இ-ள்.) வலவா-தேர்ப்பாகனே,—தணந்தவள் அக்கரி மேனியள் ஆம் கொல் - என்னைப்பிரிந்த தலைவியானவள்,(காமத்தாற்கருகி) அந்த கரிபோலும் மேனியையுடையளாவளோ!—வெண் சங்கு இனங்கள் மணந்த அளக்கரின் நின்று அழுமோ-வெண்மையாகிய சங்குக்கூட்டங்கள் கலந்த சமுத்திரம்போலக் (கண்ணீரைச்சொரிந்து) நின்று அழுவளோ!—உயிர்கள் உள் நந்த அளக்க அரிது ஆம் முதுகுன்று அரன் - ஆன்மாக்களுடைய மனங்களால் மிகவும் அளவிடுதற்கு அரியதாகிய பழமலைநாதரும்—ஓங்கு அமரகணம் தவளம் கரியான் ஏத்து இறை அன்றி காப்பு இலை - உயர்ந்த தேவகணங்களும் (அவர்க்குத்தலைவனாகிய) வெள்ளையானையையுடைய இந்திரனும் புகழும் தலைவருமாகிய சிவபெருமானையன்றி வேறே காப்பவரொருவருமில்லை. எ-று. [பாசறைமுற்றி மீண்டதலைமகன் பாகனோடு பரிந்தியம்பியது.] அளக்க என்னும் வினையெச்சத்தகரம் விகாரத்தாற்றொக்கது. (எசு)

காப்புக்கரியுந்திருமகணாயகன்காப்பவற்றின்
பூப்புக்கரியுந்தலையுடையானும்பொருந்தவைத்தான்
மாப்புக்கரியுங்குயிலும்பயில்பொழில்வண்டில்லையான்
மூப்புக்கரியும்புலியுங்கொன்றீர்ந்தமுதுகுன்றனே.

(இ-ள்.) மா புக்கு அரியும் குயிலும் பயில் பொழில் வண் தில்லையான் - மாமரங்களிலே குடிபுகுந்து கிளிகளும் குயில்களும் சத்திக்கின்ற சோலைகள்சூழ்ந்த வளப்பம்பொருந்திய சிதம்பரத்தையுடையவரும்—மூப்பு கரியும் புலியும் கொன்று ஈர்ந்த முதுகுன்றனே- முதிர்ந்த யானையையும் புலியையும்வதைத்துத் தோலையுரித்துத்தரித்த பழமலைநாதருமாகிய சிவபெருமானே,—காப்புக்கு அரியும் திருமகள் நாயகன் காப்பவற்றின் பூப்புக்கு அரியும் தலை

உடையானும் பொருந்த வைத்தான் - காத்தற்றொழிலுக்கு விஷ்ணு மூர்த்தியையும், இலக்குமிகணவராகிய அவ்விஷ்ணுவால் காக்கப் படும் சராசரங்களினுடைய படைத்தற் றொழிலுக்கு (வைரவக்கட வுளால்) கிள்ளப்பட்ட நடுத்தலைக்குறையையுடைய பிரமதேவனை யும், (கர்த்தர்களாகப்) பொருந்தும்படி வைத்தருளினர். எ-று. (எஎ)

முதுமறையந்தமுறுபொருளேநன் மூழுப்பணிக்கு
விதுமறையந்தமுடியாய்புராணம்விளங்கிரண்டொன்
பதுமறையந்தமுதுகுன்றவாணநின்பாதம்வணங்
குதுமறையந்தகனைமார்பிலெம்மைக்குறுகிடினே.

(இ-ள்.) முது மறை அந்தம் உறு பொருளே ; பழமையாகிய வேதமுடிவிலே பொருந்திய உண்மைப்பொருளே,— நல் மூழு பணிக்கு விது மறை அந்தம் முடியாய் - நல்ல முழுப்பாம்பாகிய வாசுகிக்குப்பயந்து இளம்பிறைமறைகின்ற அழகிய திருமுடியை யுடையவரோ,—விளங்கு இரண்டு ஒன்பது புராணமும் அறை அந்த முதுகுன்றவாண - பிரகாசிக்கின்ற பதினெண்புராணங்களும் துதி க்கின்ற அந்த பழமலையில்வாழ்பவரோ,—நின் பாதம் வணங்குதும்- தேவரீருடைய திருவடிகளைத் தொழுவோம்;—எம்மை குறுகிடின் அந்தகனை மார்பில் அறை - எம்மைப்பிடிக்கவந்தால் இயமனை மார் பின்கண்ணே மோதுவீராக. எ-று. (எஅ)

குறுகுமுனிவனையன்றுண்டவிம்முதுகுன்றனுக்கு
மறுகுமுனிவனைசெய்தாலுய்வாரெவர்வந்தருளென்
றறுகுமுனிவனைபோதமிடார்நமனுர்முனிவு
முறுகுமுனிவனையெய்தாரதிவறுமூடரினே.

(இ-ள்.) குறுகும் முனிவனை அன்று ஆண்ட இம்முதுகுன்ற னுக்கு - குறுகிய அகத்தியமகாமுனிவரை முற்காலத்திலே அடிமை கொண்டருளிய இந்த பழமலைநாதருக்கு—வந்து அருள் என்று உனி அறுகும் வனை போதும் இடார் - தேவரீரெழுந்தருளிவந்து அனுக்கிரகிக்கவேண்டுமென்று தியானித்து அறுகையும் தொடுத்த பூக்களையும் சாத்தாதவர்களும்—நமனார் முனிவு முறுகுமுன் இவ னை எய்தார் அறிவு அறும் மூடரின் - இயமனார் வருத்துதற்குக் கோ பமுதிருதற்கு முன்னமே இப்பழமலைநாதனை அடைக்கலமாக அடை யாதவருமாகிய அறிவில்லாத மூடர்களைப்போல—மறுகும் முனிவு அனை செய்தால் உய்வார் எவர் - (பெண்கள்) மயங்குதற்கேதுவாகிய கோபத்தை மாதாவே செய்வாளாயில் உலகத்திலே உய்வார்யாவர். எ-று. [நற்றாய்முனிவுகண்டு தலைவிவருந்தல்.] உனி இடைக்குறை. முதுகுன்றனுக்கு இடார் என இயையும். (எக)

மூடாநமாதிமிரையடைந்தாயலென்முன்னனுகன்
மீடாநமாதிபெருமானுதைக்கினுமெய்ப்புகழைப்
பாடாநமாதியெழுத்தைந்துமோதிப்பழமலைவாழ்
வீடாநமாதியடியாரடியருண்மேவினமே.

(இ-ள்.) மூடா நமா - மூடனாகிய இயமனே,—பழமலை வாழ் வீடு ஆம் நம் ஆதி - (யாம்,) முதுகுன்றத்தைத் தாம்வீற்றிருக்கும் வீடாகக்கொண்டிருக்கும் நமது ஆதிப்பொருளாகிய சிவபெருமா னுடைய—மெய் புகழை பாடா - உண்மையாகிய கீர்த்திகளைப்பா டி,—நம ஆதி ஐந்து எழுத்தும் ஓதி - நகாமுதலாகிய பஞ்சாக்கரங் களையும் உச்சரித்து,—அடியார் அடியருள் மேவினம் - (அக்கடவு ளுடைய) அடியவர்களுடைய அடியவர்கூட்டத்துள்ளே தங்கியி ருக்கின்றோம்; ஆகையால்,—திமிரை அடைந்து ஆயல் - அகங்கார

ங்கொண்டு (என்னுடையகுணங்களை) ஆராய்ந்துபாராதே;—என் முன் அணுகல் - எனக்குமுன்னும் வாராதே;—மீள்-மீண்டுவிடு; (மீளாதெதிர்ப்பையேல்,)—இனும் பெருமான் உதைக்கு தானம் ஆதி - இன்னுமொருமுறை சிவபெருமானுதைக்கு இடமாவாய். எ-று. இன்னும் என்பது குறைந்து நின்றது. (அ0)

மேவத்தகரையிவர்மகவீன்றதொல்வெற்பரச
சேவத்தகவாவொடுபூசித்துன்னைவிண்செல்வமுறும்
பூவத்தகரைநகுவேமெமக்குநின்பொங்கருளா
லோவத்தகரைவன்கப்பாசமுந்தம்முரங்குலைந்தே.

(இ-ள்.) தகரை மேவ இவர் மகவு ஈன்ற தொல்வெற்பு அரச - (நாரதர்புரிந்த யாகத்திற்றோன்றி உலகத்தையழிக்கத்தொடங்கிய) ஆட்டுக்கடாவை (வாகனமாக) விரும்பியேறிய முருகக்கடவுளைப் பெற்ற பழமலைநாதரே,—சே அத்த - இடபவாகனத்தையுடைய பிதாவே,—எமக்கு நின் பொங்கு அருளால் ஐவகை பாசமும் தம் உரம் குலைந்து ஓவ தகர் - எங்களுக்குத் தேவரீருடைய மிக்கதிருவருளால், ஐவகைப்பட்ட பாசங்களும் தம்முடைய வன்மைகுறைந்து நீங்கும்படி சேதிப்பீராக; சேதிக்கில்,—உன்னை கவாவொடு பூசித்து விண் செல்வம் உறும் பூவத்தகரை நகுவேம் - உம்மை உருக்கத்தோடு வழிபட்டு விண்ணுலகபதவியை விரும்பியடையும் உலகவியாபாரிகளைப் பழித்துச்சிரிப்பேம். எ-று. மேவ வினையெச்சத்திரிபு. ஐவகைப்பாசம்-ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி. (அக)

குலையாநிலமும்விசும்புந்தொழுமுதுகுன்றமதிக்
கலையாநில்மும்மடியழல்காயவக்காய்கனலின்

மலையாநிலமுமுடன்கூடவேமெனைவாங்குகழைச்
சிலையானிலமுமெமதில்லமாய்நின்றுசீறுவனே.

(இ-ள்.) குலையா நிலமும் விசும்பும் தொழும் முதுகுன்ற - குன்றுதலில்லாத மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் வணங்கும் பழமலைநாதரே,—மதி கலை ஆம் நில அழல் மும்மடி காய-சந்திரகலைகளிலுண்டாகின்ற சந்திரிகையானது அக்கினியினும் மூன்றுபங்கு அதிகமாகச்சுட—அக்காய் கனலின் மலயாநிலமும் உடன் கூட வேம் எனை - அந்த சுடுகின்ற அக்கினியோடு தென்றற்காற்றும் துணையாகச் சேர (அதனால் உடலம்) வேகின்ற என்னை,—வாங்கு கழை சிலையான் இலமும் எமது இல்லமாய் நின்று சீறுவன்-வளைத்த கருப்புவில்லையுடைய மன்மதனானவன் (தனக்கு) வீடும் எம்முடைய வீடாகக் குடியேறிநின்று (பாணங்களைப்பொழிந்து) கோபிக்கின்றான்: யான் யாதுசெய்வேன்.எ-று. [தலைவிவருந்தல்.] நிலா என்பது குறுகிநின்றது. (அஉ)

சிறிணையாகமதியுணும்பாம்பணிசெல்வமறை
மாறிணையாகமலிமுதுகுன்றமருவுதற்குச்
சேறிணையாகயிலாசவிலாசசுதேவவென்மின்
றேறிணையாகநிலையென்றுவாழன்மின்றொண்டர்களே.

(இ-ள்.) தொண்டர்களே - அடியார்களே,—சீறு இணை ஆக மதி உணும் பாம்பு அணி - சிற்றுணவாகச் சந்திரனைக்கவர்ந்துதின்னும் நாகங்களையணிந்த சிவபெருமானுடைய—செல்வம் மறை மால் திரை ஆக மலி முதுகுன்றம் மருவுதற்கு சேறிர்-சிறப்பாகிய வேதங்கள் பெரிய அலைகடல்போல முழங்கும் பழமலையையடைதற்குச் செல்வீராக;—ஐயா கயிலாச விலாச சுதேவ என்மின்-தலைவரோ, கைலாசமலையையுடையவரோ, எங்கும் திருவோலக்கங்கொ

ண்டருள்பவரோ, நல்லகடவுளே, என்று தோத்திரஞ்செய்வீராக;—தோல் திரை ஆகம் நிலை என்று வாழன்மின்-தோலானது திரைந்தழியும் இச்சரீரத்தை நிலையென்றுவாழ நினையாதொழிவீராக. எ-று. பாம்பணி வினைக்குறிப்புப்பெயர். பாம்பணி முதுகுன்றம் என இயையும். திரை ஆகுபெயர். (அரு)

தொண்டரைக்கூடல்விழையார்பொழின்மலர்த்தூளுதிர்த்தல்
விண்டரைக்கூடலறவுறல்போலுந்தொல்வெற்புறுமைக்
கண்டரைக்கூடலுடையாரைப்போற்றிலர்கற்றறியா
மிண்டரைக்கூடல்வழியேநடத்துபுவீழ்த்துவரே.

(இ-ள்.) தொண்டரை கூடல் விழையார் - அடியவரைக்கூடிவாழ்தலை விரும்பாதவர்களும்—பொழில் மலர் தூள் உதிர்த்தல் விண் தனக்கு ஊடல் அற உறல் போலும் தொல் வெற்பு உறும் மை கண்டரை - சோலைகள் மலர்களிலுள்ள மகரந்தங்களைச் சிந்துவது, தேவலோகமானது இப்பூவுலகத்திற்குண்டாகிய பிணக்கை நிவர்த்திக்க வருதலை நிகர்க்கின்ற பழமலையில்வீற்றிருக்கும் நீலகண்டத்தையுடையவரும்—கூடல் உடையாரை போற்றிலர் - நான்மாடக்கூடலை யுடையவருமாகிய சிவபெருமானை வணங்காதவர்களும்—கற்று அறியா மிண்டர் - (அக்கடவுளுடைய கீர்த்திகளை) ஆய்ந்தறியாத அகங்காரிகளுமாகிய கீழ்மக்கள்,—ஐ கூடு அல் வழியே நடத்துபு வீழ்த்துவர் - சிலேத்துமக்கூடாகிய இவ்வுடம்பைத் தீயவழியிலே செலுத்திப் பிறவிப்படுகுழியிலே தள்ளுவர். எ-று. விழையார் போற்றிலர் கற்றறியாமிண்டர் வீழ்த்துவர் என இயையும். பூந்துகள் பொன்மயமாயிருத்தலின் விண்ணுலகிற் குவமையாக்கினர். (அச)

வீழிவலஞ்சுழிதில்லைசிராப்பள்ளிவேதவனங்
காழிவலஞ்சுழியன்மேவுகுன்றைக்கடவுள்விடி.

ஞாழிவலஞ்சுழிவெள்வளையானணையன்னகல்விப்
பாழிவலஞ்சுழியுந்தியுள்வாங்குவர்பாவையரே.

(இ-ள்.) வீழி வலஞ்சுழி தில்லை சிராப்பள்ளி வேதவனம் காழி வலம் சுழியல் மேவு குன்றை கடவுள் விடின்-திருவீழிமிழலை திருவலஞ்சுழி சிதம்பரம் திரிசிரபுரம் வேதாரணியம் சீர்காழி திருவல்லம் திருச்சுழியல் என்னும் இத்தலங்களில் வீற்றிருக்கும் பழமலைநாதர் விட்டுப்பிரிந்தால்,—பாவையர் சுழி உந்தி-பிரிந்தமங்கையர், கூடற்சுழிகளை எழுதியெழுதி,—ஆழி வலம் சுழி வெள் வளையான் அணை அன்ன கல்வி பாழிவலம் உள் வாங்குவர்-சக்கரத்தையும் வலம்புரியாகிய வெள்ளிய சங்கையுமுடைய விஷ்ணுமூர்த்தியினது சயனமாகிய ஆதிசேஷனைநிகர்த்த கல்வியினது பெரியவன்மையையும் உள்ளே யிழந்து வருந்துவர். எ-று. [தலைவன் பிரிந்துழித் தலைவிமுதலோர் கூடற்சுழியிழைத்து வருந்தல்.] கல்வியிற்சிறந்த மகளிர்க்கும் கணவரைப்பிரிந்திருத்தல் கூடாதாகலின், குன்றைக்கடவுள் விடின் கல்விப்பாழிவலம் உள்வாங்குவரென்றார். வல்லம் என்னுந்தலம் வலமெனநின்றது. வலமும் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. (அ௫)

பாவலருக்குமலிபொருளீந்துகொள்பாட்டினர்க்கு
மேவலருக்குமழுவார்க்குநன்முதுவெற்பினுக்குக்
காவலருக்குமயலாகிநின்றுகலங்குகின்று
யாவலருக்குவிளைநிலமாயினையாயிழையே.

(இ-ள்.) ஆய் இழையே - ஆய்ந்த ஆபரணத்தைத் தரித்த என் மகளே,—பாவலருக்கு மலி பொருள் ஈந்து கொள் பாட்டினர்க்கு-சுந்தரமூர்த்திநாயனருக்கு மிகுந்ததிரவியங்களைக் கொடுத்து ஏற்றுக்கொண்ட திருப்பாட்டையுடையவரும்—மேவலர் உக்கும் மழு

வார்க்கு - சத்துருக்கள் அழிந்தொடுங்குதற்கு ஏதுவாகிய மழுப் படையையுடையவரும்—நல் முது வெற்பினுக்கு காவலருக்கு - நல்ல பழமலைக்குத் தலைவருமாகிய சிவபெருமானுக்கு—மயலாகி நின்று கலங்குகின்றாய் - மயக்கங்கொண்டு நின்று கவலைப்படுகின்றாய்;—ஆ அலருக்கு விளைநிலம் ஆயினை - ஆச்சரியம்! பழிச்சொல்லுகளுக்கு நீ ஒரு விளைநிலமுமாயினாய். எ-று. [நற்றாயிரங்கல்.] பாவலர் என்பதற்கு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்முதலிய ஏனைப் பாவலர்களைக்கொள்ளினும் அமையும். (அ௬)

ஆயக்கலையகலுஞ்சீர்முதுகுன்றரசமுனஞ்
சாயக்கலையனிமிர்த்தசெம்மேனியதப்பலில்லா
னேயக்கலையபுழுக்கூடெனுமுடனேயமெல்லா
மாயக்கலையமலமாயைகன்மங்கள்வந்தருளே.

(இ-ள்.) ஆய கலை அகலும் சீர் முதுகுன்று அரச - ஆராய்ந்து பார்க்குங்கால் கலைஞானங்களுக்கும் அப்பாற்பட்டுவிளங்கும் புகழினையுடைய பழமலைநாதரே,— முனம் சாய கலையன் நிமிர்த்த செம் மேனிய - முன்னொருகாலத்தில் (திருப்பனந்தாளில் தாடகையின் பொருட்டுத்) தாழ்ந்து குங்குலியக்கலயநாயனாரால் நிமிர்க்கப்பட்ட செவ்விய திருமேனியையுடையவரே,—தப்பல் இல்லான் நேயம் கல் ஐய - தவறுதெறிந்த சாக்கியநாயனாரது அன்பாகிய கற்களையுடைய தலைவரே,—புழு கூடு எனும் உடல் நேயம் எல்லாம் மாய - புழுக்கள்மலிந்த கூடென்று சொல்லப்படும் இந்த தேகாபிமானமெல்லாம் கெடவும்,—மலம் மாயை கன்மங்கள் கலைய வந்து அருள் - ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலங்களும் கலைந்து

நீங்கவும், (தேவரீரெழுந்தருளி) வந்து (அடியேனுக்கு) அனுக்கிரகிக்கவேண்டும். எ-று. (௬எ)

வந்திக்கநாவினினையேவழுத்தமலர்விழியான்
முந்திக்கனுவிதொலைத்தோய்நினதுமுதுவெற்பையே
சிந்திக்கநாவிமதநாறுமாதரைச்சேருமின்ப
நந்திக்கனுவினொழிவாமென்றுன்னுறநல்குதியே.

(இ-ள்.) மலர் விழியால் முந்து இக்கன் ஆவி தொலைத்தோய்-(மேனோக்கிய) செந்தாமரைமலர்போலும் அக்கினிக்கண்ணினால் முற்காலத்திலே கருப்புவில்லையுடைய மன்மதனுயிரை நீக்கினவரே,—நினையே வந்திக்க - தேவரீரையே வணங்கவும்,—நாவில் வழுத்த - (தேவரீரையே) நாவினாற்றுதிக்கவும்,—நினது முதுவெற்பையே சிந்திக்க-தேவரீருடைய பழமலையையே தியானிக்கவும்,—நாவி மதம் நாறும் மாதரை சேரும் இன்பம் நந்தி கனுவின் ஒழிவாம் என்று உன்னுற நல்குதி - கஸ்தூரிமணங்கமழும் பெண்களைக் கூடியணைதலாலுண்டாகும் சிற்றின்பமானது கெட்டுக் கனவைப்போல பொய்யாக அழிந்துபோமென்று நினைக்கவும், எனக்கருளுவீராக. எ-று. நினையே வெற்பையே என்னும் ஏகாரங்கள் பிரிநிலை. (௬அ)

நல்குரவேநல்லுரைதான்முதுகுன்றர்நாட்டினெக்குச்
சொல்குரவேநல்குரவுறுவேலதொடைகள்பல
மல்குரவேனலிதண்விட்டகம்புக்கமானையிந்த
வொல்குரவேனல்லிடைக்கொடுபோகலென்றோதிலையே.

(இ-ள்.) குரவே - குராமரமே,—நல் குரவு உறு வேல - நல்ல குராமாலையையணிந்த வேற்படையையுடைய தலைவனே,—ஏனல்

பல் தொடைகள் மல்கு உரம் இதண் விட்டு அகம் புக்க மானை-தினைப்புனத்தின்கணுள்ள பலகட்டுக்கள் பொருந்திய வலிய பரணைவிட்டு வீட்டையடைந்த மான்போலும் பெண்ணை,— அல்லிடை கொடு போகல்-இராக்காலத்திலே (தனித்துக்) கொண்டு செல்லாதே;—இந்த ஒல்குரவு ஏன்-இந்த இழிதொழில் (உனக்கு) யாதுக்கு?—என்று ஓதிலை - என்று சொன்னாயில்லை;—முதுகுன்றர் நாட்டு நல்லுரை தான் உனக்கு நல்குரவோ சொல் - பழமலைநாதரது நாட்டின்கண்ணே நல்லவசனமும் உனக்குத்தரித்திரமா? சொல்லுவாயாக. எ-று [நற்றாய் குரவொடுபுலம்பல்.] உரைதானும் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. (அகூ)

ஓதித்திருக்குமொழிவதல்லாமலுன்னுண்மைநிலை
சாதித்திருக்குமியல்புதந்தாயிலைதன்மையெல்லாம்
போதித்திருக்குமொழிகுன்றைவாணபொருப்புதவுஞ்
சோதித்திருக்குமரிபாகசுந்தரன்றூதுவனே.

(இ-ள்.) தன்மை எல்லாம் போதித்து இருக்கும் மொழி குன்றை வாண - அருட்டிறங்களையெல்லாம் (ஆன்மாக்களுக்கு) உணர்த்தி (முற்றும் ஓதும் ஆற்றலின்மையால்) வேதங்களும் ஒடுங்கிநிற்கும் பழமலைநாதரே,—பொருப்பு உதவும் சோதி திரு குமரி பாக - இமயமீன்ற பிரகாசம்பெற்ற அழகிய உமாதேவியினது ஓர்பாகத்தையுடையவரே,—சுந்தரன் தூதுவனே - சுந்தரமூர்த்திநாயனாருக்குத் தூதாகச்சென்றவரே,—ஓதி திருக்கு மொழிவது அல்லாமல்-சில நூல்களைக்கற்று விபரீதப்பொருள்களைச் சொல்லுவதையேயன்றி,—உன் உண்மை நிலை சாதித்து இருக்கும் இயல்பு தந்தாய் இலை - உமது

உண்மையாகிய முத்திநிலையில் வழுவாதுபழகிச் (சமாதியோடுகூடி) இருக்கும் சுபாவத்தை (அடியேனுக்குத்) தந்தருளினீரில்லை. எ-று.

தூதகண்டாலுமதியணிவேணியர்துன்னிவந்தென்
காதுகண்டாலுமுடன்மூக்கின்பெய்தநல்காரெனவெம்
மாதுகண்டாலுமுவக்கப்படுமொழிவந்தனள்கார்ப்
போதுகண்டாலுமயில்வாழ்பொழிற்பழம்பூதரனே.

(இ-ள்.) கார் போது கண்டு ஆலும் மயில் வாழ் பொழில் பழம்பூதரனே - கார்காலத்தைக்கண்டு ஒலித்து ஆடாநின்ற மயில்கள் வாழ்கின்ற சோலைகள்சூழ்ந்த முதுகிரிநாதரே,—கண்டாலும் உவக்கப்படும் மொழி எம் மாது-கற்கண்டினாலும் விரும்பப்படுகின்ற மதுரமொழியையுடைய எமது தலைவியானவள்,—மதி அணி வேணியர் தூது கண்டாலும் - சந்திரனைத்தரித்த சடைமுடியையுடைய சிவபெருமான் (நானனுப்பிய) தூதுவரைக்கண்டாராயினும்—துன்னி வந்து என் காது கண் தாலும் உடல் மூக்கு இன்பு எய்த நல்கார் என-(என்னிடத்தே) நெருங்கிவந்து காதும் கண்ணும் நாவும் உடலும் மூக்குமாகிய ஐம்பொறிகளும் (கேட்டு கண்டு உண்டு உற்று உயிர்த்து அறிதலாகிய) ஐவகையின்பங்களையும் அனுபவிக்கும்படி அருளாரென்று வெறுத்து,—வந்தனள் - (இரவுக்குறியிடையீடுபட்டு விடியற்காலையில்) வீடுவந்துசேர்ந்தனள். எ-று. [இரவுக்குறி பிழைத்தமை இறைவற் கிகுளையுரைத்தல்.] தாலும் என்னும் உம்மை ஏனையிடத்தும் கூட்டப்பட்டன. (கூக)

பூதரனன்றுசிலைக்கென்றுகொள்ளும்புராந்தகனுர்
சீதரனன்றுபொழிலெனுங்குன்றைத்திருநகரார்

காதரனன்றும்விழிபெறுமாறுடைக்கண்ணுதலார்
மாதரனன்றுவருமதிக்கோய்தலைமாற்றிலரோ.

(இ-ள்.) சிலைக்கு பூதரம் நன்று என்று சொல்லும் புராந்தகனார் - வில்லாதற்கு மேருமலையே நல்லதென்று வளைத்துக் கையிற் கொண்ட திரிபுராந்தகரும்—சீதரன் அன்று எனும் பொழில் திருகுன்றை நகரார் - மாயவனென்று மயங்கிப் பின்னர் அன்றெனத் தெளியும் சோலைகள் சூழ்ந்த திருமுதுகுன்றமென்னும் தலத்தையுடையவரும்—காதரன் அன்றும் விழி பெறுமாறு உடை கண்ணுதலார்- தீவினைத்தொடர்பையுடைய யான் (கேவலத்திற்கிடந்த)அக்காலத்தும் அருள்நோக்கம் பெறும்படி என்னையடிமையாகவுடைய நெற்றிக்கண்ணருமாகிய சிவபெருமான்,—அன்ன்று வரும் மதிக்கு மாதர் ஓய்தலை மாற்றிலர் - தழலைப் பரப்பிவருகின்ற சந்திரனுக்கு (தன்னைவிரும்பிய) மகளிர் வருந்திநிற்றலை நீக்கிலரில்லை. எ-று. [நற்றாயிரங்கல்.] (௬௨)

மாற்குச்சிவந்தமலர்த்தாண்முதுகிரிவாணன்மறை
நூற்குச்சிவந்தவிராப்பொருளென்பவர்நோக்குள்ள்வேள்
கோற்குச்சிவந்தவிறலாளனின்னுங்குறுகிலனிம்
மேற்குச்சிவந்ததறியேனிவட்குவிளைவதுவே.

(இ-ள்.) மாற்கு உச்சி வந்த மலர் தாள் முதுகிரி வாணன்-விஷ்ணுமூர்த்திக்கு உச்சியிற்றரிக்கக்கிடைத்த தாமரைமலர்போலும் திருவடிகளையுடைய பழமலைநாதரும்—மறை நூற்கு சிவம் தவிராப் பொருள் என்பவர் நோக்கு உளன்-வேதநூலுக்குச் சிவபெருமானே

ருவரோ நீங்காப்பரம்பொருளென்று நிச்சயித்துணாக்கும் அன்பர்களு டைய காட்சிக்கெளியவரும்—வேள் கோற்கு சிவந்த விறல் ஆளன்- மன்மதனுடைய மலரம்புகள்பொருட்டுக் கோபித்த வெற்றியையு டையவருமாகிய சிவபெருமான்,—இன்னும் குறுகிலன் - இதுகா றும் வந்தாரில்லை;—இம்மேற்கு சிவந்தது - இம்மேலைத்திசையோ செவ்வானமாயிற்று:—இவட்கு விளைவது அறியேன் - இனி இப்பெ ண்ணுக்கு உண்டாகுந் துன்பங்களை யானறியேன். எ-று. [மாலைய ம்பொழுதுகண்டு நற்றுயிரங்கல்:] (கங)

விளையவளையுமணிநெல்வயன்முதுவெற்பிறைவ
னளையவளையுறவுடையானவ்வனங்கசிலை
வளையவளையுமுடையுந்துறந்துவருந்துறுமிவ்
விளையவளையுமொருபுடைசாரவிருத்திலனே.

(இ-ள்.) மணி விளைய வளையும் நெல் வயல் முதுவெற்பு இறை வன் - மணிகொண்டு விளைதலால் சாய்கின்ற நெற்பயிர்களையுடைய வயல்கள்சூழ்ந்த பழமலைநாதரும்—அளைய அளையும் உறவு உடை யான்-அன்போடும் அடிமைபுக (அவரிடத்தே) தாமுங்கலக்கும் நட் பையுடையவருமாகிய சிவபெருமான்,—அவ்வனங்கன் சிலை வளைய- அந்த மன்மதனுடைய கருப்புவில்வளைந்தவுடனே—வளையும் உடை யும் துறந்து வருந்துறும் இவ்விளையவளையும் ஒரு புடை சார இருத் திலன் - வளையல்களையும் வஸ்திரத்தையுமிழந்து துக்கித்துக்கிடக் கின்ற இந்தச் சிறுபெண்ணையும் ஒருபக்கத்திலே தங்கும்படி வைத் தாரில்லை. எ-று. [நற்றுயிரங்கல்.] (கச)

இருத்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலென
விருத்தவிருப்பமுதுகுன்றவாணனைநீவலியுஞ்
செருத்தவிருப்பவுததியையாருணச்சிந்தைசெய்வர்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே.

(இ-ள்.) தேன் மொழியே - தேன்போலும் மொழியையுடைய எனது மகளே,—இருத்த இருப்பது இடத்தில் அல்லாமல் இருப்பல் என-(தேவரீர்) இருத்திவைக்க நாளிருந்துவாழ்வது இடப்பாகத்திலல்லாமல் (மற்றொருதானங்களில்) இருந்து வாழமாட்டேனென்று—விருத்தம் விருப்பம் முதுகுன்றவாணனை நீ வலியும் செருத விர் - நடனத்தின்கண்ணே ஆசையையுடைய பழமலைநாதனை நீ வலிந்துவாதாடும் சண்டையைவிட்டுவிடு;—உப்ப உததியை உண யார் சிந்தை செய்வர் - உப்பையுடைய சமுத்திரநீரைக் குடிப்போமென்று யாவர்நினைப்பார்;—இருப்பு திருத்த அவலை யாவர் மெல் லுவர் - இரும்பினாலே திருத்தமாகச்செய்யப்பட்ட அவலை யாவர் மென்று தின்பார். எ - று. [நற்றுயிரங்கல்.] முடியாதென்பது கருத்து. (கூடு)

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்கண்டெய்தெனக்கண்மறுகி
னேவியுமானும்மகட்கிடர்நீர்செய்திரோழையரே.

(இ-ள்.) ஏழையரோ - பேதைமையுடைய தாய்மார்களே,—காவியும் மானும் விழியாய் - (பிறவற்றையேயன்றி) நீலோற்பலமல

ணையும் ஒப்பாகின்ற கண்களையுடைய புதல்வியே,— முதுகுன்று தேவியும் மானும் விளையாடு இடம் உடை நுதல் செங்கண் ஆவியும் ஆனும் வரும் - திருமுதுகுன்றத்திலே, உமாதேவியும் மானும் விளையாடாநின்ற இடதுபக்கத்தையுடைய சிவந்த நெற்றிக்கண்வாய்ந்த எமதுயிர்போலும் சிவபெருமானும் (அவரெழுந்தருளும்) இடபவாகனமும்வருகின்ற—சீர் அணி விழவை கண்டு எய்து என கண் மறுகின் ஏவி - சிறப்புப்பொருந்திய அழகிய திருவிழாவைத் தரிசித்து வரக்கடவாயென்று விசாலம்பெற்ற வீதியிலே அனுப்பி,—உமால் நும் மகட்கு இடர் நீர் செய்திர் - உங்களாலேயே உங்களுடையபுத்திரிக்குத் துக்கங்களை நீங்கள் செய்தீர்கள். எ-று. [தலைவிவருத்தங் கண்டோர் தாய்மாரை நிந்தித்தல்.] (கசு)

ஏடலையாறுகிழித்தெதிரோறவிண்ணேறுபுகழ்க்
கூடலையாறுபுலியூர்மகிழ்முதுகுன்றர்பெற்ற
வேடலையாறுமுயிர்த்தெடுத்தேந்துபுமென்கைகொடுத்
தூடலையாறுவருகவென்பார்நல்லுமைதனையே.

(இ-ள்., ஏடு அலை ஆறு கிழித்து எதிர் ஏற விண் ஏறு புகழ்- (திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பாசுரமெழுதிய) பனையேடு அலையையுடைய வைகையாற்று நீரைக்கிழித் தெதிரேசெல்ல விண்ணுலகமளவுஞ் சென்ற கீர்த்தியையுடைய—கூடல் ஐயாறு புலியூர் மகிழ் முதுகுன்றர் - மதுரையும் திருவையாறும் சிதம்பரமுமாகிய தலங்களை விரும்பிவீற்றிருக்கின்ற பழமலைநாதரானவர்,— பெற்ற வேள் தலை ஆறும் உயிர்த்து எடுத்து ஏந்துபு மென்கை கொடுத்து - தாம்பெற்ற முருகக்கடவுளை ஆறுதலைகளினுச்சியினும் மோ

ந்து இரண்டுகையினாலும் தழுவியெடுத்து ஏந்திக்கொண்டு மெல்லியகைகளிலே கொடுத்து,—நல் உமைதனை ஊடலை ஆறு வருக என்பார்-நல்ல உமாதேவியாரைநோக்கி நீ பிணக்கையொழி சமீபத்திலேவரக்கடவாய் என்றுசொல்லுவர். எ-று. (கஎ)

உமையிடப்பாகனலங்கூர்முதுகுன்றுடையனராச்
சுமையிடப்பாகவரிதேடடியுறத்தூமலர்க
டமையிடப்பாகமருவுவரோலவர்தங்களைப்பா
ரமையிடப்பாகனணுகானுதைநினைந்தஞ்சுவனே.

(இ-ள்.) உமை இடம் பாகன் - உமாதேவியாரை இடதுபாகத்திலுடையவரும்—நலம் கூர் முதுகுன்று உடையன் - நன்மைமிகுந்த பழமலையையுடையவருமாகிய சிவபெருமானது,—அரா சுமை இடப்பு ஆக அரி தேடு அடி உற - ஆதிசேஷனுக்குச் சுமையாகிய இப்பூவுலகமானது பிளவுபட விஷ்ணுமூர்த்தியினால் தேடப்பட்ட திருவடிகளிலே பொருந்தும்படி,—தூ மலர்கள்தமை இட பாகம் மருவுவரேல் - சுத்தமாகிய புஷ்பங்களைக்கொண்டு அருச்சிக்கப் பரிபக்குவத்தை அடைவாராயின்,—அவர் தங்களை பாரம் மையிடம் பாகன் அணுகான் - அவர்களைப்பிடிக்கும்படி, கனத்த எருமைக்கடாவைச் செலுத்தும் இயமனானவன் கிட்டான்,—உதை நினைந்து அஞ்சுவன் - (முன்பு உதைத்த) உதையைநினைத்துக்கொண்டு பயந்தோடுவன். எ-று. முதுகுன்றுடையன் அடி என இயையும். (கஅ)

அஞ்சுவணத்தைவரன்முறையோதவரக்கெறிந்த
பஞ்சவணத்தைமருவுமென்றூனுமைபாகமொடு

செஞ்சுவணத்தையனையநின்கோலமென்சிந்தையுற
விஞ்சுவணத்தைமகிழ்குன்றைவாணவிரும்புவனே.

(இ-ள்.) விஞ்சு உவணத்து ஐ மகிழ் குன்றைவாண - மேம்பட்ட கருடவாகனத்தையுடைய விஷ்ணுமூர்த்தியானவர் விரும்பிவணங்கும் பழமலைநாதரே,—அஞ்சு வணத்தை வரன்முறை ஓத-பஞ்சாக்ஷரத்தைக் கிரமப்படியே உச்சரிக்கவும்,—அரக்கு எறிந்த பஞ்சு வணத்தை மருவும் மென் தாள் உமை பாகமொடு - செந்நிறத்தை வீசுகின்ற பஞ்சினது அழகைப்பொருந்திய மெல்லிய திருவடிகளையுடைய உமாதேவியார்பொருந்திய இடப்பாகத்தோடு,—செம்சுவணத்தை அனைய நின் கோலம் என் சிந்தை உற விரும்புவன்-சிவந்த பொன்னைநிகர்த்த தேவரீருடைய திருமேனி என்னுடைய மனதிலே எக்காலமும் நிலைபெறவும், ஆசைப்படுகின்றேன். எ-று. வர்ணம் என்பன வணம் என நின்றன. (கூக)

விருத்தாசலாசங்கராமலைமாதுவிழிகளிக்கு
நிருத்தாசலசந்திரன்போலுடம்பிடைநின்றவர்தங்
கருத்தாசலசம்பவமிலர்க்காண்டறங்காட்டியசொற்
றிருத்தாசலசந்தமியேன்றலைக்குன்றிருவடியே.

(இ-ள்.) விருத்தாசலா - பழமலையையுடையவரே,—சங்கரா-சுகஞ்செய்பவரே,—மலை மாது விழி களிக்கும் நிருத்தா - உமாதேவியாருடைய கண்கள்களிக்கும் நடனத்தை யுடையவரே,—சலம் சந்திரன் போல் உடம்பிடை நின்றவர்தம் கருத்தா-சலத்திற்காணப்படும் சந்திரன்போல தேகத்தின்கண்ணேநின்ற மெய்ஞ்ஞானிகளுடைய கருத்தரே,—சலம் சம்பவம் இலர்க்கு ஆண்டு அறம் காட்

டிய சொல் திருத்தா - பொய்யாகிய பிறவியை ஒழித்தவர்களாகிய சனகாதிகளுக்குக் (கைலைமலையிலே கல்லாலவிருக்ஷத்தினடியிலே) சகலதருமங்களையுமுணர்த்திய சொற்றிருத்தமுடையவரே,— தமியேன் தலைக்கு சலசம் உன் திருவடியே - அடியேனுடைய சிரசிலணிதற்குரிய தாமரைமலராவன தேவரீருடைய திருவடிகளேயாம். எ-று. சந்திரன் சலத்தினிடத்தே பிரதிபலித்துக் காணப்படினும், அதில் சம்பந்தமில்லாதிருத்தல்போல; ஞானிகளும் உடம்போடுகூடியிருப்பினும், அதிற்பற்றற்று உடையானிடத்தே பற்றுடையராயொழுகல்பற்றி, சலசந்திரன்போ லுடம்பிடைநின்றவர்தங்கருத்தா என்றார். சொல்லாலுணர்த்திய அறங்களையெல்லாம் குறிப்பாற் றிருத்தினமைபற்றி சின்முத்திரையைச் சொற்றிருத்தமென்றார். அச்சின்முத்திரைக்குப் பொருளாவது மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர் அம்மலர்த்தாணிழலடங்கும் என்பது. திருவடியே என்னும் ஏகாரம் பிரிநிலை. (கoo)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

கணபதி துணை.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௭	௯	பழலை	பழமலை
௧௩	௨	விழ	விலக
௨௧	௧௨	யுடைவ	யுடையவ
௨௬	௧௬	வாவம்	வாகும்
௨௭	௪	கைளு	கைகளு
௩௫	௧௨	துதிக்	துதிக்கவிளங்
௩௬	௧௩	தையும்	தைத்

உ

கணபதிதுணை.

பிரசித்தபத்திரம்.

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னபட்டணம் தண்டையார்பேட்டை திருவொற்றியூர் ஹைரோட்டு 279 - வது நெம்பர் வீட்டில் நம்மிடத்திலும், சென்னபட்டணம் முத்தியாலுபேட்டையில் கலாரத்நாகர அச்சுக்கூடத்தலைவராகிய ம-ள-ள-ஸ்ரீ, ஊ-புஷ்பரதசெட்டியாரவர்களிடத்திலும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேஜர் ம-ள-ள-ஸ்ரீ, பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்திலும், சிதம்பரம், ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல் காலைச்சந்திக்கட்டளை ம-ள-ள-ஸ்ரீ, கந்தசுவாமிமுதலியாரவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா - ௩. தபாற்கூலி அணா - ௧.

இங்ஙனம்,

க. வ. திருவேங்கடநாயுடு.